Registered as a Newspaper

பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

புதன் பொய்கை

சுடர் : 38
கதிர் : 361

புதன்கிழமை 22 நவம்பர் 2023

கார்த்திகை 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### பொலிஸ் காவலில் இளைஞன் சாவு!

# நீதிக்காக குரல்கொடுக்க சட்டத்தரணிகள் திரள்வு!

### 40க்கும் மேற்பட்டோர் முன்னிலையாக முடிவு

**யாழ்ப்பாணம், நவம்பர் 22**

**வட்டுகோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர் ஒருவர் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்தார் என்று கூறப்படும் சம்பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், இவ் விவகாரத்துக்கு நீதிகோரி இந்த வழக்கில் 40க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகத் தீர்மானித்துள்ளனர்.** »15

## சித்திரவதைக் கொலை: விசாரிக்க மூவர் குழு!

யாழ்ப்பாணம், நவ. 22
வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியல் கைதியொருவர் சித்திர »15

## சடலத்துடன் போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 22
வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞ »15




## மாவீரர் நினைவாலயம் நல்லூரில் நேற்றுத் திறப்பு


(படம் :- ஐ.சிவசாந்தன்)

யாழ்ப்பாணம், நவ. 22
தமிழர் தாயகத்தில் மாவீரர் வார நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பமாகிய நிலையில், யாழ்ப் »15

## மாவீரர் வாரம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 22
தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களில் மாவீரர் வாரம் நேற்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது. பல்வேறு இடங்களில் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப் »15

வட்டு. பொலிஸிடமிருந்து

## கைமாறியது வழக்கு

யாழ்ப்பாணம், நவ. 22
திருட்டுச்சம்பவம் தொடர்பில் அண்மையில் வட்டுக்கோட்டை பொலி »15

## கார்த்திகை வாசம்; இன்று முதல் வீசும்!

யாழ்ப்பாணம், நவ. 22
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் 'கார்த்திகை வாசம்' என்ற பெயரில் நடத்திவரும் மலர்க்கண்காட்சி இம்முறையும் நல்லூர் சங்கிலியன் »15

யாழ்.பல்கலையில்

## சட்டத்துறைப் போதனை தமிழிலும் வேண்டும்!

விரிவு:- பக்.15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போர் வெற்றியை முன்னிறுத்தி தப்பமுடியாது ராஜபக்சவினர்!

## ஜே.வி.பி. கூறுகின்றது

கொழும்பு, நவ.22

போரை முடிவுக்குக்கொண்டு வந்ததால்தான் ராஜபக்சக்கள் பழிவாங்கப்படுகின்றனர் எனக் கூறப்படுவது ஏற்புடைய காரணி அல்ல என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ராஜபக்சக்கள் போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால் பழிவாங்கப்படுகின்றனர் எனக் கூறுகின்றனர். அவ்வாறு இல்லை. நாட்டை வழித்துத் துடைத்து, பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய வைத்துள்ளனர். அதற்கான அரசியல் ரீதியிலான எதிர்ப்பே வெளியிடப்படுகின்றது.

தேவையேற்படின் அவர்கள் பொருளாதாரத்துக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தினர் என்பதையும் ஒவ்வொன்றாக விளக்கத் தயார். நபர்களின் பெயர்களைப் பட்டியலிடவும் தயார். உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை சரிவர விளங்கிக்கொள்ளவேண்டும். உரிய வகையிலான பொருளாதார முடிவுகள் எடுக்கப்படாமல் அதற்கு மாறாக எடுக்கப்பட்டதால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மட்டுமல்ல அதற்கு முன்னரும் உரிய காலத்தில் உரிய வகையில் எடுக்கவேண்டிய தீர்மானங்கள் எடுக்கப்படாமையும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக 2015 முதல் 2019 வரையான காலப்பகுதி குறித்து ஆராயப்படவேண்டும் - என்றார். (எ-44)

# எதிர்க்கட்சிகளின் கனவு பட்ஜெட் மூலம் சிதைப்பு

## தெலவத்த எம்.பி. பெருமிதம்

கொழும்பு, நவ.22

மக்கள் மேலும் இக்கட்டான சூழ்நிலைக்குள் சிக்கிக்கொள்ளும்வரை காத்திருந்த எதிர்க்கட்சிகளின் கனவுகள் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சிதைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்களுக்கு நிவாரணம் வழங்குவது மாத்திரமன்றி, அந்த நிவாரணங்களை எவ்வாறு வழங்குவது என்பதை எடுத்துக்காட்டிய இம்முறை வரவு - செலவுத் திட்டம், நிச்சயம் அதிக வாக்குகளுடன் நிறைவேற்றப்படும்.

எமது நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, எடுக்கப்பட்ட பிரபல்யமற்ற மற்றும் அரசியல் நோக்கமற்ற தீர்மானங்களால், தற்போது நாடு ஸ்திரத் தன்மை அடைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்துள்ளது.

மக்களுக்கு நிவாரணம் கிடைக்காது என எண்ணிய எதிர்க்கட்சிகளின் கனவை சிதைப்பதில் இவ்வருட வரவு -செலவுத் திட்டம் வெற்றி கண்டுள்ளது.

எதிர்க்கட்சியினர் கூறுவது போல் உண்மையில் அவர்கள் இளைஞர்களுக்காக முன்நிற்கிறார்களா என்ற கேள்வி தற்போது எழுகிறது. ஆயினும், இழந்த இளைஞர் பிரதிநிதித்துவத்தை மீண்டும் கொண்டுவர முடிந்ததன் மூலம், நாட்டின் சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் களத்துக்கு இளைஞர்கள் முன்வருவதற்கான வாய்ப்புக்கிடைத்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன் - என்றார். (எ-44)

# 7 வியாபார நிலையங்களில் ஒரே இரவில் பணம் திருட்டு!

வவுனியா, நவ.22

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள 7 வியாபார நிலையங்களில் நேற்றுமுன்தினம் இரவு பணம் திருடப்பட்டுள்ளது. சுமார் 50 ஆயிரம் ரூபா வரையில் திருடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

வன்னிப் பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலத்துக்கு முன்பாக உள்ள வியாபார நிலையங்களின் கதவுகளை உடைத்து நுழைந்த திருடர்கள் பணத்தைத் திருடிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வியாபார நிலைய உரிமையாளர்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய பாதுகாப்புக் கமரா பதிவுகளின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ10)

# சீனாவின் விசேட பிரதிநிதியை சந்தித்துப் பேசினார் ஜனாதிபதி!

கொழும்பு, நவ.22

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் அரச உறுப்பினருமான சேன் யிங்க் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் உட்பட இலங்கைக்கு சீனா வழங்கும் ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி, அதற்காக சீன ஜனாதிபதிக்கும் அரசுக்கும் நன்றி தெரிவித்தார்.

சுற்றுலா, விளையாட்டு, விவசாயம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் துறைமுக நகரம் என்பன இன்று முதலீட்டுக்குத் தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் அதிக பங்களிப்பை வழங்கக்கூடிய பெல்ட் என்ட் ரோட் திட்டத்தின் இரண்டாவது கட்டத்துக்குப் பிரவேசிப்பதற்கு அதன் பங்காளரான இலங்கை போன்ற நாடுகள் தயாராக உள்ளன என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரம், கடற்பயணத்துக்கான சுதந்திர வலயமாக இருக்க வேண்டும் எனவும் புவிசார் அதிகாரப் போட்டியின்றி அமைதியான வலயமாகப் பேண இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (எ-44)

# 100,000 தொன் அரிசி இறக்குமதி

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, நவ. 22

எதிர்வரும் டிசெம்பர் பண்டிகைக் காலத்துக்காக ஒரு மில்லியன் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதிசெய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது இந்த விடயத்தைத் தெரிவித்தார்.


கீரிச் சம்பா மற்றும் சம்பாவுக்குப் பதிலாக அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதன்மூலம் விலையைக் கட்டுப்படுத்த முடியாத பட்சத்தில் தொகையை அதிகரிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)

பொலிஸ் சித்திரவதையால்

# இறந்த இளைஞனின் குடும்பத்துக்கு சரவணபவன் நேரில்சென்று ஆறுதல்

## நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளிப்பு





யாழ்ப்பாணம், நவ.22

வட்டுக்கோட்டையில் பொலிஸ் சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்த இளைஞனின் இறுதிச் சடங்கு நேற்று நடைபெற்ற நிலையில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் அதில் கலந்துகொண்டார்.

இளைஞரின் குடும்பத்தைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்த அவர், இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்ட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதன்பின்னர் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், இந்த விடயம் தொடர்பாக நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர், வட்டுக்கோட்டைப் பொலிஸார் தொடர்பாக மக்களிடையே எழுந்துள்ள சந்தேகங்கள், பிரதேச மக்கள் மற்றும் இளைஞனின் குடும்பத்தினரின் ஆதங்கம் என்பவற்றை எடுத்துரைத்தேன். இந்தச் சம்பவம் தொடர்பான நீதியான விசாரணைகள் நடைபெறும். முழுமையான மருத்துவ அறிக்கைகளை எதிர்பார்த்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார் - என்றார். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளையோர் பிரச்சினையை ஆராய்வதற்கு வடக்கில் குழு

## வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்

**யாழ்ப்பாணம், நவ.22**

**வடக்கு மாகாணத்தில் இளையோர் மத்தியில் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்வதற்காக குழுவை நியமிக்க வேண்டும் என்று வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

கல்வி, சுகாதாரம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுகளின் செயலாளர்கள், அரச அதிகாரிகள் ஆகியோருடன் நடந்த கலந்துரையாடலிலேயே வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தில் இளையோர், பாடசாலை, மாணவர்கள் மற்றும் கட்டிளம் பருவத்தினரிடையே காணப்படும் சில நடவடிக்கைகளால் சமூக மட்டத்தில் பல்வேறு சிக்கல்கள் உருவாகின்றன. அவற்றை ஆராய்ந்து தீர்க்கும் பட்சத்தில், சிறந்த சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்தமுடியும்என்றுஅதிகாரிகள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதை ஏற்றுக்கொண்ட வடக்கு ஆளுநர் சமூக மட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்று பணிப்புரை விடுத்தார்.

சிறார்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுதல், வீட்டு வன்முறைகளுக்கு ஆளாகுதல், சிறுவர் தொழிலாளர்களாக மாற்றப்படுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் வடக்கு ஆளுநரிடம் அதிகாரிகள் எடுத்துக்கூறியுள்ளனர்.

அரச அதிகாரிகளின் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்த ஆளுநர், வட மாகாணக் கல்வி, சுகாதாரம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுகளின் செயலாளர்களையும், ஏனைய உயர்மட்ட அதிகாரிகளையும் இணைத்து குழுவை நியமிக்க வேண்டும் என்று கூறினார். இந்தக் குழுவின் ஆலோசனைக்கு அமைய துறைசார் குழுக்களையும், உப குழுக்களையும் நியமித்து, சமூக மட்டத்தில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளை உடனடியாக ஆராய்ந்து, அதற்கு எவ்வாறு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது என்பது தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் பணிப்புரை விடுத்தார். (எ-26-100)

# டிஜிற்றல் நிறுவனங்களுக்கு வரிவிலக்கு அளிக்கக்கூடாது

## பிக்மீ நிறைவேற்று அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, நவ.22

அரசாங்கம் டிஜிற்றல் நிறுவனங்களுக்கு வரிவிலக்கு அளிக்கக்கூடாது என பிக்மீ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸூல்பர் தெரிவித்துள்ளார்.

சீமா கற்கைகள் நிறுவனமும் இலங்கை பங்குச் சந்தையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஒரு கலந்துரையாடலிலேயே ஸூல்பர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் டிஜிற்றல் நிறுவனங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. வெளிநாட்டு டிஜிற்றல் நிறுவனங்கள் பல தமது உள்ளூர் முகவர்கள் ஊடாக இலங்கையில் முதலீடு செய்துள்ளன.

அரசாங்கம் டிஜிற்றல் நிறுவனங்களுக்கு வரிவிலக்கு அளிக்கும் பட்சத்தில் அவர்கள் பெருந்தொகைப் பணத்தை இலாபமாக ஈட்டமுடியும். இதனால் அரசாங்கம் எதிர்பார்த்த வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாமல் போகலாம்.

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைவரும்வரிவலையமைப்புக்குள்கொண்டு வரப்படவேண்டும் - என்றார். (எ-6)

# வரிகள் செலுத்துவதற்கு 2 இலட்சம் பேர் உள்ளீர்ப்பு

கொழும்பு, நவ. 22

இந்த ஆண்டில் 2 இலட்சம் பேர் புதிதாக வரி அனுமதிப்பத்திரத்துக்குப் பதிவு செய்துள்ளனர் என்று 'கோபா குழு' தெரிவித்துள்ளது.

உள்நாட்டு இறைவரித்திணைக்கள அதிகாரிகளுக்கும், 'கோபா குழு' அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை 18 வயதுக்கு மேற்பட்ட 16 மில்லியன் பேர் நாட்டில் தற்போது உள்ளனர். அவர்களை வரி செலுத்துவோர் பட்டியலில் உள்வாங்குவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

13 ஆயிரம் நிறுவனங்கள் வரி செலுத்துவதற்கான பதிவுகளைக் தற்போது மேற்கொண்டுள்ளன என்று

# கிளிநொச்சியில் கஞ்சா மீட்பு!

கிளிநொச்சி, நவ.22

கிளிநொச்சி, பாரதிபுரத்தில் வீடொன்றில் இருந்து ஒரு கிலோ 700 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (எ-113)

# புத்தர் சிலையைக் காட்டி பெற்றோல் பறித்த பொலிஸ்

கொழும்பு, நவ.22

முச்சக்கர வண்டியில் புத்தர் சிலை மற்றும் யானைத் தந்த மாதிரிகள் வைத்திருப்பது குற்றம் எனக் கூறிச் சாரதிக்கு குற்றச்சீட்டை வழங்குவதற்குப் பதிலாக முச்சக்கரவண்டியில் இருந்து ஒரு லீற்றர் பெற்றோலை எடுத்துச் சென்ற உபபொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஆகியோரை மாவத்தகம பொலிஸ் அதிகாரிகள் குழு கைது செய்துள்ளது.

குருணாகல் இங்குருவத்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் வெலேகெதர பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருமே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முச்சக்கரவண்டிச் சாரதியின் முகநூல் பக்கத்தில் பதிவிடப்பட்ட தகவலைக் கண்ணுற்ற வடமேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வசந்த கித்சிறி ஜயலத்தின் விசேட பணிப்புரையின் பேரிலேயே இரு பொலிஸ் உத்தியோகத்தர்



# புதினம் தெரியுமோ?

பொலிஸ்காரரின்ர வெறியாட்டத்தில சித்தன்கேணிப் பெடியன் செத்த விசயத்தில இன்னும் சில விசயங்கள் தெரியவந்திருக்குது. பொலிஸ்காரர் அந்தப் பெடியனை 11 ஆம் திகதிதான் பிடிச்சனாங்கள் எண்டு பதிவில காட்டினாலும் அதுக்கு நாலுநாளுக்கு முதலே ஆளைப் பிடிச்சுக்கொண்டு போயிருக்கினம். முதல்நாள் பொலிஸில பெடியனைப் பிடிச்சதுக்கான எந்த ஆதாரத்தையோ, பதிவையோ செய்யாததுக்குக் காரணம் இருக்குது. ஆரையும் பொலிஸ்காரர் பிடிச்சால் அவையை 24 மணித்தியாலத்துக்குள்ள நீதிமன்றத்தில கொண்டு போய் நிப்பாட்டவேணும். ஆனால் அப்பிடி நீதிமன்றத்துக்குக் கொண்டுபோன பிறகு பொலிஸ்காரர் சந்தேகத்தில பிடிச்ச ஆக்களில கைவைக்கிறது கஷ்டம். அதுக்காகத்தான் 8 ஆம் திகதியே பிடிச்ச பெடியனை 11 ஆம் திகதி தான் தாங்கள் பிடிச்சமாதிரி தங்கட அறிக்கையள், பதிவுகளில பொலிஸ்காரர் எழுதியிருக்கினம். அப்பதான் தங்களுக்கு சட்டரீதியாச் சிக்கல்வராமல், பிடிபட்ட ஆக்களை அடிச்சு, வெருட்டி அவையிட்ட தகவலை எடுக்கலாம். இப்பிடிக் கனகேஸுகளில அவை செய்திருக்கினம். ஆனால் இந்தக் கேஸில அவை ஒரு பிழை விட்டிட்டினம். பெடியனை ஒரு கடையடியில வைச்சுத்தான் பொலிஸ் பிடிச்சது. அங்க இருந்த 'சிசிரீவி' கமெராவில பொலிஸ் 8 ஆம் திகதியே அந்தப் பெடியனை பிடிக்கிறது வடிவாப் பதிவாகி இருக்குது. அதால 4 நாளா ஏன் இப்பிடி சட்டவிரோதமாப் பிடிச்சு வைச்சிருந்தவை எண்ட கேள்விக்கும் பொலிஸ்காரர் பதில் சொல்லவேண்டி வரப்போகுது.

களவெடுத்த சந்தேகத்தில முதல் வேற ஒராளைத் தான் பிடிச்சது. 'நான் களவெடுத்த நகையை அலெக்ஸ் மூலம் தான் ஒரு இடத்தில குடுத்தனான்' எண்டு பிடிபட்டவர் பொலிஸிட்ட அடி வேதனையில சொல்லியிருக்கிறாராம். அலெக்ஸ் எண்ட இந்தச் சித்தன்கேணிப் பெடியனுக்கும், களவுக்கும் நேரடிச் சம்பந்தமில்லையெண்டு பொலிஸுக்கும் தெரியும். நகையை எங்க குடுத்தது எண்டு அறியத்தான் இவ்வளவு ஆய்க்கினையும், சித்திரவதையுமாம். அப்பிடிக் கையைக் கடுமையாக் கட்டி வைச்சு அடிச்சதால அலெக்ஸின்ர கையில கயிறுவெட்டினதால கடும் காயம். அதுக்கு மட்டும் தான் ஆஸ்பத்திரியில மருந்து குடுத்தவை. உடம்பில அடிச்சதுக்கு ஒரு 'எக்ஸ்ரே' கூட எடுக்கேலை. அப்பிடி எடுத்திருந்தால் அலெக்ஸுக்கு உட்காயம் இருக்கெண்டும், அது கிட்னியைப் பாதிக்கிற அளவுக்குக் கடுமையானது எண்டும் கண்டுபிடிச்சிருப்பினம். ஆனால் கைக்காயத்துக்கு மட்டும் மருந்தைக் கட்டிப் போட்டு அனுப்பினதும் அந்தப் பெடியன்ர சாவுக்கு ஒரு காரணமாப் போட்டுது.

பெடியன் ஆஸ்பத்திரியில இருக்கேக்க ஒரு நாள்தான் வீட்டுக்காரரைப் பாக்க விட்டிருக்கினம். பிறகு விடேலை. ஜெயிலுக்குக் கொண்டுபோன பிறகும் அவையைப் பாக்க விடேலையாம். பிறகு பிள்ளையைப் பிணமாத்தான் பாத்திருக்கினம். சும்மா இருந்த பெடியனைக் கொண்டுபோய் அடிச்சுக் கொல்லுறவை, உந்த வாளோட திரியிற காவாலியளைக் கண்டால் பம்மிப்போடுவினம் பாருங்கோ.

-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களை முடக்க உள்நாட்டுக்குள் சூழ்ச்சி!



## ஜயந்த கெட்டகொட எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, நவ.22**

**போரை முடிவுக்குக் கொண்டுவந்த ராஜபக்சக்களை முடக்குவதற்கு சர்வதேசம் அவ்வப்போது முயற்சிகளை எடுத்தன. அவை கைகூடவில்லை. தற்போது உள் நாட்டில் உள்ள சூழ்ச்சியாளர்கள் டொலருக்கு அடிபணிந்து ராஜபக்சக்களை வேட்டையாட முற்படுகின்றனர்.**

-இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த கெட்டகொட.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், ராஜபக்சக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பையும் விமர்சித்தார்.

அங்கு அவர் தெரிவித்துள்ளதாவது: போரை முடிவுக்குக் கொண்டுவந்த ராஜபக்சக்களை வேட்டையாடும் முயற்சியின் ஓர் அங்கமாகவே நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அரசமைப்பை மீறியே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மனித உரிமை சம்பந்தமான வழக்கு 30 நாள்களுக்குள் தொடுக்கப்படவேண்டும். ஆனால் காலம் கடந்து தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைக்கு ஏற்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்துக்கே நிதி அதிகாரம் இருக்கின்றது. இந்த அதிகாரத்துக்கு சவால் விடுக்கும் வகையில் தீர்ப்பு வழங்கமுடியாது. வரி குறைப்பு தொடர்பான யோசனை வரவு - செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு எதிராக நீதிமன்றத்தால் நடவடிக்கை எடுக்கமுடியுமா? ஆனால், ராஜபக்சக்கள் கொள்ளை அடித்ததால்தான் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது என நீதிமன்றத் தீர்ப்பில் இல்லை. இது மகிழ்ச்சியளிக்கின்றது. ஏனெனில் ராஜபக்சக்கள் கொள்ளை அடித்தனர், வெளிநாட்டில் பணம் உள்ளது என்றெல்லாம் மக்கள் மத்தியில் கருத்துகளை விதைப்பவர்களின் கூற்று போலியாகியுள்ளது. இது வரிகுறைப்பு சம்பந்தமான பிரச்சினையாகும்.

'அரகலய' காலத்தில் போராட்டக்காரர்களைக்கொன்று தமது ஆட்சியைத் தக்கவைத்திருக்க முடியும். அதைக் கோத்தாபய ராஜபக்ச செய்யவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை அழிக்கமுடியாது. மீண்டெழுந்துள்ளோம். கட்சியின் எதிர்காலப் பயணத்தைத் தடுக்க முடியாது- என்றார். (எ-44)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகமும் உடலில் சுறுசுறுப்பும் அதிகரிக்கும் நாள். குடும்பத்தில் அன்பும் அந்நியோன்யமும் அதிகரிக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.



**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். செயல்கள் திட்டமிட்டபடி நடக்கும். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும்.



**மிதுனம்** : தொடங்கும் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். கவனம் தேவை. விநாயகரை வழிபடுவது நன்று.



**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்லவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.



**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உடல்நலனில் கவனம் தேவை.



**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.



**துலாம்:** புபுதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல்நலனில் கவனம் தேவை. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கூடுதல் லாபம் கிடைக்கும்.



**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும்.



**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரம் செழிக்கும்.



**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.



**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.



**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும்.

## கைதடி விக்கினேஸ்வரா பரிசில் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 22

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் நா.கருணாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தாபனங்கள் மற்றும் பொது முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண அரச மரக்கூட்டுத்தாபன உதவிப் பிரதேச முகாமையாளர் சு.வரதராசா, யாழ்ப்பாணம் வேள்ட்விஷன் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் ஜெ.சர்வதமனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-159)

## பாடசாலை நேரங்களில் ஆசிரியருக்குச் செயலமர்வு

### மாணவரின் கல்வி பாதிப்பென பெற்றோர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, நவ. 22

கிளிநொச்சி வடக்கு வலயத்தில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு பாடசாலை நேரத்தில் செயலமர்வுகளை நடத்துவதால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்று பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது: கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு பாடசாலை நேரத்தில் செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன. ஒரே பாடசாலையிலிருந்து 5 வரையான ஆசிரியர்கள் செயலமர்வுக்கு அழைக்கப்படுகின்றனர்.

இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன் மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சி அடைகின்றன.

எனவே கிளிநொச்சி வடக்கு வலயத்தின் உயரதிகாரிகள் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயலமர்வுகளை நடத்தவேண்டும்- என்றனர். (ச-159)

## தோழர் சுப்பிரமணியம் நினைவுக் கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், நவ. 22

புதிய ஜனநாயக மாக்சிஸ லெனினிசக் கட்சியின் ஆரம்ப பொதுச்செயலாளர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 34 ஆவது ஆண்டு நினைவையொட்டி கருத்துரைகளுடனான கலந்துரையாடல் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் தோழர் பி.முத்துலிங்கம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் நினைவுரையை 'இலங்கையின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் இனப்பிரச்சினைத் தீர்வு மார்க்கமும்' என்ற தலைப்பில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் ஆற்றவுள்ளார்.

கருத்துரைகளை சட்டத்தரணி சோ.தேவராஜா, நீ.பிரதீபன், க.தணிகாசலம், கா.செல்வம் கதிர்காமநாதன், ம. இராசநாயகம் ஆகியோரும்

## பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு 3 நாள்கள்

சாவகச்சேரி, நவ. 22

கல்விப் பொது உயர்தர பொறியியல் தொழில்நுட்ப பாடத்திட்டத்துக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் இன்று தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி வரை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆசிரியர்கள் இதில் வளவாளர்களாகப் பங்கேற்கவுள்ளனர்.

[illegible] யாழ்ப்பாண கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களைப் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக்

## திருநெல்வேலி சிறுவர் இல்ல மாணவிகள் சாதனை

யாழ்ப்பாணம், நவ.22

அநுராதபுரத்தில் நடைபெற்று முடிந்த தேசிய மட்ட பரத நாட்டிய/கர்நாடக சங்கீதப் போட்டிகளில் யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் சாதனை படைத்துள்ளனர். வில்லுப்பாட்டு, பல்லியம், கொழுந்து நடனம் ஆகிய போட்டிகளில் முதலாமிடத்தையும் தனி வாத்தியப் (வீணை) போட்டியில் யோ.கிருஷ்ணவேணி இரண்டாமிடத்தையும் பெற்று சாதனை நிகழ்த்தியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சித்திரவதைக் கலாசாரம் தொடர்கதையே

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மருத்துவ அறிக்கையின்படி அவரது இறப்புக்குக் கடுமையான சித்திரவதைகளும், தாக்குதல்களுமே காரணம் என்பது தெளிவாகியிருக்கின்றது. இந்தச் சம்பவம் மக்களிடையே அதிர்ச்சியையும், அச்சத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இளைஞர் சில நாள்கள் பொலிஸ் நிலையத்தில் சட்டத்துக்குப் புறம்பாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்று தெரிகின்றது. பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் குற்றத்தை ஒப்புக்கொள்ள வைக்கக் கடுமையான சித்திரவதைகளைச் செய்தனர் என்று உயிரிழந்த இளைஞரின் வாக்குமூலம் அடங்கிய காணொலி ஒன்று வெளியாகி, நெஞ்சைப் பதறவைத்திருக்கிறது.

இலங்கையில் பொலிஸ் காவலில் இருப்போர் மீதான சித்திரவதைகளும், தாக்குதல்களும் புதியனவல்ல. ஆண்டு தோறும் சுமார் 100 வரையான இத்தகு சம்பவங்கள் நடப்பதாக மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகள் வெளிப்படுகின்றன. ஆனால் அவற்றில் பெரும்பாலான சம்பவங்கள் அமிழ்த்திப் புதைக்கப்படுகின்றன. பெரும்பாலும் பொலிஸார் சந்தேகநபர்களிடம் இருந்து வாக்குமூலம் அல்லது சாட்சியம் என்பவற்றைப் பெறுவதற்காகவே சந்தேகநபர்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்குகின்றனர். வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நடந்த சம்பவத்திலும் இதுவே நடந்திருக்கின்றது. இலங்கையில் உள்ள சட்ட ஏற்பாடுகளில் இருந்து தப்பிக்கொள்ளமுடியும் என்பதைப் பயன்படுத்திப் பொலிஸாரால் இவ்வாறான குற்றங்கள் மிகச் சுதந்திரமாக மேற்கொள்ளப்படுகின்றன. கடந்தகாலங்களில் இவ்வாறான குற்றச்சாட்டுகளில் சிக்கியவர்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டபோதும், அவர்கள் மிகக் குறைந்த தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர் அல்லது இடமாற்றப்பட்டனர். பெரும்பாலானோர் போதிய சாட்சியங்கள் இல்லாமையால் விடுவிக்கப்பட் டனர். இவையெல்லாம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மத்தியில் 'நாம் எதையும் செய்யலாம்' என்ற மனத் துணிவினை உண்டாக்கி, அதன் நீட்சியாகவே தொடர்ந்தும் இவ்வாறான சித்திரவதைகள் தொடர்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஆட்சியாளர்களும் பாதுகாப்புத் தரப்பினருக்குத் தவறான முன்னுதாரணமாகியுள்ளனர். ஆட்சியாளர்கள் தங்கள் அரசியல் இலாபம் கருதி எடுக்கும் தீர்மானங்கள் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொள்ளும் இவ்வாறான சித்திரவதை, கொலைச் சம்பவங்களுக்கு உந்துதலாக இருக்கின்றன என்பதையும் மறுதலிக்கமுடியாது. மிருசுவிலில் 9 அப்பாவிப் பொது மக்களைக் கோரமாகக் கொன்ற இராணுவ அதிகாரி ஒருவர், நாட்டின் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டமை அனைவருக்கும் தெரிந்த விடயம். இப்படியான பல உதாரணங்கள் இந்த நாட்டில் உள்ளன. இவை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இடையே தங்களது செயல் சரியானது என்ற மனப்பாங்கை வளர்த்துவிட்டிருக்கின்றன.

இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்கும் நடைமுறைகள் அரசமைப்பு மற்றும் சட்ட ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டபோதும், அவை வெறும் எழுத்துவடிவில் இருக்கின்றனவே தவிர நடைமுறைக்கு வருவது அரிதே. இதுவும் இவ்வாறான குற்றங்கள் தொடர்வதற்கு ஒரு காரணம். ஒருவரைச் சித்திரவதைப்படுத்துவது தண்டனைக்குரிய, ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத 10 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனை வழங்கப்படக்கூடிய குற்றம் என்று இலங்கைச் சட்டம் குறிப்பிடுகின்றது. ஒருவர் ஏதேனும் குற்றத்தைப் புரிந்தவரானாலும் அவர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இவ்வாறான தடுப்புக்காவல் சித்திரவதை அல்லது கொலைகளைத்தடுக்க சட்டத்தின் இறுக்கமான போக்கால் மட்டுமே முடியும். தற்போது எடுக்கப்படும் கடுமையான நடவடிக்கைகளே எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்காதிருக்க வழிகோலும். சித்திரவதைகளால் சிதைக்கப்பட்டுக் கொல்லப்பட்ட சித்தன் கேணி இளைஞனுக்கு, சாவின் பின்னராவது நீதி கிடைக்குமா?




## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023



'பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்?
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!."
(–கவிஞர் புதுவை இரத்தினதுரை)



# வங்குரோத்தாக்கியவர்களின் சொத்துகளைப் பறியுங்கள்!



வலியுறுத்துகின்றார் சந்திரிகா

**கொழும்பு, நவ.22**

**நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளமை தொடர்பில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு மிக முக்கியத்துவமுடையதாகும். அந்த வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் உள்நாட்டில் மாத்திரமின்றி, வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அவற்றை மீட்டு அரசுடைமையாக்கவேண்டும் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.**

காணொலி ஒன்றின் ஊடாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நாட்டை வங்குரோத்துக்குள்ளாக்கியமை தொடர்பில் அண்மையில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தீர்க்கமானதாகும். நாட்டுக்காக இளம் தலைமுறையினர் எவ்வாறு சிந்தித்துச் செயற்படவேண்டும் என்பதற்கு இது சிறந்த முன்னுதாரணமாகும். நீதிமன்றம் தண்டனை வழங்கவில்லை என்றபோதிலும், இவர்கள் நிச்சயம் தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டியவர்களாவர். இவர்களிடமிருந்து நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். நாட்டில் கொள்ளையடித்து வெவ்வேறு நாடுகளிலும் இவர்கள் சேமித்து வைத்துள்ள பணம் மற்றும் சொத்துகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, அதே போன்று உள்நாட்டில் பதுக்கி வைத்துள்ள சொத்துகள் தொடர்பிலும் ஆராய்ந்து அவற்றை அரசுடைமையாக்கவும், மக்களுக்குப் பகிர்ந்தளிக்கவும் முடியும். உடனடியாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றேன். அமைச்சரொருவர் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தவறு என்று விமர்சித்துள்ளார். அதை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். நீதிமன்றத்தின் தீர்ப்பை எவராலும் விமர்சிக்கமுடியாது - என்றார். (எ-இ)

# வெப்பநிலையைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் ஆலோசனை

2030 ஆம் ஆண்டளவில் 1.5 செல்சியஸால் உலக வெப்பநிலையை மட்டுப்படுத்துவதற்குத் தேவையான இலக்குகளுடன், காலநிலை அனர்த்தங்களுக்கான உடனடித் தீர்வுகளைச் செயற்படுத்தவேண்டியது அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

'இலங்கை பசுமை ஹைட்ரஜன் மாநாடு 2023 நேற்று கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் ஆரம்பமானது. 2023 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் தீர்வுகளுக்கான அறிக்கையில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அளித்த வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன.

இந்த நூற்றாண்டின் இறுதியில் உலக வெப்பநிலை 3 செல்சியஸால் உயர்வடையக்கூடும். 2030 ஆம் ஆண்டளவில் 1.5 செல்சியஸினால் உலக வெப்பநிலையை மட்டுப்படுத்துவதற்குத் தேவையான இலக்குகளுடன், காலநிலை அனர்த்தங்களுக்கான உடனடித் தீர்வுகளைச் செயற்படுத்தவேண்டியது அவசியம்' - என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## நாளை

**23.11.2023**
**வியாழக்கிழமை**
**கார்த்திகை 07**

சுபநேரம் : 07.41 - 09.11
ராகுகாலம் : 01.41 - 03.11

உத்தான ஏகாதசி விரதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் கந்தசஷ்டி உற்சவத்தின் சூரசங்காரம் அலைகடலென திரண்ட பக்தர்களுக்கு மத்தியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-63)



முல்லைத்தீவு - முள்ளியவளையிலுள்ள ஸ்ரீ கல்யாண வேலவர் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதத்தின் சூரசங்காரம் பெருமளவு பக்தர்கள் சூழ கடந்த சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது. (ச-19)



## ஆங்கில கவிதை நயத்தல்

# வீரசிங்கம் கல்லூரி மாணவி தேசியத்தில் தங்கப் பதக்கம்



யாழ்ப்பாணம், நவ. 22

ஆங்கிலதின கவிதை நயத்தல் போட்டியில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது. தரம் - 7 கல்வி பயிலும் மாணவியான அன்கா அன்ரன் கௌரிதாசனே தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கத்தை தனதாக்கியுள்ளார். (ச)

# வடக்கு கைப்பணியாளரிடையே 'சில்ப அபிமானி' விருதுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 22

கைப்பணியாளர்களை தேசியரீதியில் கௌரவப்படுத்தும் வகையில் கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலுடன் தேசிய அருங்கலைகள் பேரவையால் வருடாந்தம் நடத்தப்படும் போட்டியின், மாகாண மட்டப் போட்டி கடந்த 15ஆம், 16 ஆம் திகதிகளில் வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தால் யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள கைப்பணியாளர்களால் வடிவமைக்கப்பட்ட ஆயிரத்து 105 கைப்பணி ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதில் நடுவர்களால் முதல் மூன்று இடங்களுக்கும் தலா 39 ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. திறமைப்பரிசுக்குரிய 196 ஆக்கங்களும் தெரிவாகின. இதில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற 117 ஆக்கங்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் கொழும்பு 'அபேகம' வளாகத்தில் நடைபெறும் தேசிய போட்டிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

'சில்ப அபிமானி- 2023' தேசிய கைப்பணிப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற கைப்பணியாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



இன்போனிற்ஸ் என்ற தொழில்நுட்ப நிறுவனத்தின் ஏற்பாட்டில் பூப்பந்தாட்டத் தொடரொன்று அண்மையில் நடத்தப்பட்டது. வடமாகாணத்திலுள்ள 23 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்த அணிகள் இந்தத் தொடரில் பங்குபற்றின. '3 அக்ஸியன்ஸ் ஏ' அணியினர் முதலாவது இடத்தையும், விற்றாலியன்ஸ் அணியினர் இரண்டாவது இடத்தையும், இன்போனெற்றீஸ் ஸ்குவாட் அணியினர் மூன்றாவது இடத்தையும் பெற்றன. (ம-27)



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினால் மாற்றுத் திறனாளிகள்தின நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் திருமதி ச.குணஜா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம், பயர்மெட், அன்பே சிவம் அறக்கட்டளை நிறுவனம் மற்றும் மக்கள் வங்கி என்பன அனுசரணை வழங்கியிருந்தன. (ரி-9)



வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி களின் பரிசளிப்பு விழா, பிரதேச சபையில் அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் கலந்துகொண்டார். (ம-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொலித்தீன் பாவனை விழிப்புணர்வுப் பேரணி

யாழ்ப்பாணம். நவ.22

யாழ். மாவட்ட பொலித்தீன் விற்பனையாளர்களுக்கு பொலித்தீன்பாவனை தொடர்பான சட்ட ஒழுங்குவிதிகள் பற்றிய விழிப்பூட்டல் பேரணி மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக் கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபை யாழ்.மாவட்ட அலுவலக பிரதிப் பணிப்பாளர் து.சுபோகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். திருக்குடும்பக் கன்னியர் தேசிய பாடசாலையின் சுற்றாடல் முன்னோடி மாணவர்கள், பொறுப்பாசிரியர்கள், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய சுற்றாடல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ரி-125)



ஆனைக்கோட்டை கிராம அலுவலர் பிரிவில் கடந்த சனிக்கிழமை பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. நிகழ்வில் கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-66)



# விழிப்புணர்வு நிகழ்வு

சாவகச்சேரி, நவ.22

தென்மராட்சிப் பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினரின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நிகழ்வு வரணி மத்திய கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வு "குரல் கொடுங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள்" எனும் தொனிப் பொருளின் கீழ் சமூக மட்டத்திலான விழிப்புணர்வு இடம்பெற்றது. நிகழ்வில் சாவகச்சேரி மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி, வரணி மத்திய கல்லூரி உளவளத்துணை ஆசிரியர், உளவளத் துணை உத்தியோகத்தர், பெண்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ரி-9)






# ஐயப்பன் விரத வழிபாடுகள்

யாழ்ப்பாணம், நவ.22

ஐயப்பன் விரதத்தின் 60 நாள் மண்டலாபிஷேக பெருவிழாவின் முதலாம் நாள் மாலையிடும் உற்சவம் கோண்டாவில் ஸ்ரீ ஐயப்பன் சபரிமலை ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்புற இடம்பெற்றது. உற்சவ கிரியைகள் ஆலய பிரதம குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்களால் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து கன்னிக் குருசாமிமார்கள், ஏனைய குருசாமிமார் கள் ஆகியோருக்கு திருமாலை அணிவித்து விரதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச-27)



# டெங்கு நுளம்பு ஒழிப்பு கிளி.யில் சிரமதானம்

கிளிநொச்சி, நவ.21

டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக பாதீனியச் செடிகளை அழிக்கும் சிரமதானம் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சிரமதானப் பணியில் மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், மேலதிக மாவட்டச் செயலர் (காணி) திருமதி நளாயினி இன்பராஜ் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர். (ச-113)



# சுயதொழில் பயிற்சி

யாழ்ப்பாணம், நவ.22

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் சிறுதொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல், சுயதொழிலை மேம்படுத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு விளக்குமாறு செய்யும் பயிற்சி வழங்கப்பட்டது. கல்லுண்டாய்ப் பிரதேச மக்களின் அபிவிருத்தியை நோக்காக் கொண்டு சுயதொழிலை மேற்கொள்ளும் முகமாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்தப் பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் 20 பயனாளிகள் பங்குபற்றிப் பயனடைந்தனர். (ரி-66)



# ஐயப்ப சாமிகளுக்கு மாலை அணிவிப்பு

வவுனியா, நவ.22

ஐயப்ப விரதத்தை கடைப்பிடிக்கும் சாமிகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் ஆலயத்தில் குருசாமி கிருஸ்ணா குருசாமிகளால் ஐயப்பன் சாமிகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. இந்துக்களால் முன்னெடுக்கப்படும் சபரிமலை சுவாமி ஐயப்பன் விரத பூசை வழிபாடுகள் நேற்று ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்சாரத் துறையின் சீர்திருத்தத்துக்கு அனுமதி

**கொழும்பு, நவ.22**

**மின்சாரத்துறையின் முக்கியமான சீர்திருத்தங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உத்தேச மின்சாரத்துறை சீர்திருத்த மசோதாவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதிய சட்டவரைவு வர்த்தமானியாக வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும். நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டவுடன் புதிய மின்சாரச் சட்டம் இலங்கை மின்சாரசபையின் சேவைகளைத் துண்டிக்கவும், இலங்கை மின்சாரசபையை மறுசீரமைக்கவும், செயற்றிறன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தவும் உதவும் - என்றார். (எ-இ)



யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம் வலய மாணவர் நாடாளுமன்ற அமர்வு காரசார விவாதத்துடன் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸ் பங்கேற்றனார். (ச)

# சீனியைப் பொறுப்பேற்க அரசாங்கம் நடவடிக்கை!

கொழும்பு, நவ.22

இறக்குமதி வரியை அதிகரிப்பதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட சீனியைப் பொறுப்பேற்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதுடன், சீனியை 'சதொச' விற்பனையகங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பல்பொருள் அங்காடிகள் ஊடாகச் சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். சீனிக்கான இறக்குமதி வரியானது 25 சதமாகக் காணப்பட்ட நிலையில்,



அதை 50 ரூபாவாக அதிகரிப்பதற்கு அண்மையில் அரசாங்கம் தீர்மானித்திருந்தது. (எ-இ)


MORA EXAMS 2023

Mora E Tamil

மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான முன்னோடி பரீட்சை ஆனது 13 வருட வெற்றியின் பின் 14ஆவது முறையாக நடைபெறவுள்ளது.

**கார்த்திகை 25 - மார்கழி 10 வரை பரீட்சைகள் இலங்கை முழுவதும் நடைபெறும்.**

நிகழ்நிலை விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதற்கான இறுதித்திகதி 22.11.2023 வரையும் அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதற்கான இறுதித்திகதி 23.11.2023 வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

**அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.**

076 351 4599, 077 020 4139
moraetamils@gmail.com
www.moraetamils.com
/Mora EXAMS


-பரீட்சைக் குழு-
மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள்

Online Application form | Guidance Video Tamil | Guidance Video English

Our platinum sponsor: Northway Family Mart

ஊடக அனுசரணை:- உதயன்


## மரண அறிவித்தல்



**ஞானப்பிரகாசம் தேவராசா (பிரகாஸ் ஜுவலறி)**

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், மூளாயைப் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் தேவராசா அவர்கள் கடந்த (18.11.2023) அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் சேதுப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் சிவஇன்பநாயகி அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், ஆனந், ஜெயந்தி, பிரகாஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனிமொழி, அமரர் ரமேஸ்குமார், பிரகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், குணபாக்கியம், அமரர் சிதம்பரநாதன், கதிர்காமநாதன், லிங்கேஸ்வரி சிவப்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தாமோதரநாதன், அமரர் ஞானாகரன், அமரர் நாகேஸ்வரி, பஞ்சாயுதன், அமரர் சிவகுமார், ருக்மணி, யாழினிதேவி, புஸ்பமலர் ஆகியோரின் மைத்துனரும், தேனுஜா, நீருஜா, தாமிரா, பவித்திகன், ருஷாந், ருஷானி, ருஷானா, ருஷாலி, ருஷாந்தி ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**மூளாய் மத்தி,**
**மூளாய்.**

**தகவல்:**
**பிள்ளைகள்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்**
**15 . 01 . 1933**



**மறைவு**
**23 . 10 . 2023**

23.10.2023 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அம்மம்மா,

**அமரர் பத்தன் சின்னமணி**

**கண்முன்னே வாழ்ந்த காலம்**
**கனவாகிப் போனாலும்**
**எம் முன்னே உங்கள் முகம்**
**எந்நாளும் உயிர் வாழும்**
**மண் விட்டு மறைந்த நீங்கள்**
**விண் நோக்கிச் சென்றாலும்**
**கண்விட்டு மறையாமல்**
**கனகாலம் இருப்பீர்கள்!**

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள், இன்று (22.11.2023) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம், தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அரசடி வீதி,**
**கட்டுடை,**
**மானிப்பாய்.**

**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**
**076 642 7104**

(CS 27052) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்னும் எத்தனை காலமோ?

## கவிதைநூல் நூலாய்வு

● சி.சசிகாந்த்
ஆசிரியர்
யா/கொக்குவில் இந்து கல்லூரி

அண்மையில் 'இன்னும் எத்தனை காலமோ?' என்ற கவிநூல் வெளியீட்டு விழாவுக்குச் செல்வதற்கான அழைப்பிதழ் கிடைத்திருந்தது. கவிஞரும் கல்லூரி முதல்வருமான இரா.ஜெயக்குமாரால் பிரசவிக்கப்பட்ட இந்தக் கவிதைநூல் இலக்கிய வெளியில், கவி வழியில், வீறு நடைபோடத் தொடங்கி விட்டது. இந்நூலில் இடம் பெற்ற எண்பத்து இரண்டு கவிக் கிளைகளில், சில கவிவரிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் என்னால் இன்னும் விட்டு இறங்க முடியவில்லை. அவை பற்றி என் உள்ளக் கிடக்கையில் இருந்து ஒரு சிலவற்றை இலக்கிய நண்பர்களோடு பகிரவேண்டியது இலக்கியத்தை இரசிப்பவன் என்ற ரீதியில் பொறுப்பும் கடமையுமாகும்.

**'முடியுடை மூவேந்தர் முச்சங்கம் அமைத்து முத்தமிழ் வளர்த்த முதல் முந்நூறு ஆண்டுகள் தமிழன்னை தரணியெங்கும் தனிக்கோலோச்சினாள்'**

அவ்வண்ணம் இக்கவி நூலின் நுழைவாயிலில் தமிழன்னையைத் தரிசிக்க, விகசிக்க முடிகிறது.

**'மூவேந்தர் கொடையாக
பாரெங்கும் பரிமளித்த
மூத்த தாய் மொழியே
முழுமை தந்து வாழியவே'** என்று கவி வரிகள் தமிழன்னையை பெருமைப்படுத்த,

**'காலம் கடந்து வாழும்
கன்னித்தமிழ் வாழ்க!
பண்டைப் புலவர் தந்த
பைந் தமிழே நீ வாழ்க!'**

என்ற கவி வரிகள் மூலமாகத் தன்னை வாழ வைக்கும் தமிழை வாழ்த்தும் நன்றி மறவாக் கவிநெஞ்சம் புலனாகின்றது.

தமிழன்னையைத் தொடர்ந்து, தமிழுக்காய் கவிஞர்தனைப் பெற்றளித்த நற்றாய்க்கும் கவி கண்டேன்.

தன்னை பிரசவித்தவளுக்காய் கவியொன்று பிரசவமானது.

**'அரச பணி எனக்கு வர
ஆனந்தப் பரவசத்தில்
முரசறைந்து திரிந்தாயே!
போர்க்கால இழுத்தடிப்பால்
ஈராண்டுகள் கழிய..
முதல் சம்பளமும் காணாது
முந்தியே போய்விட்டாய்!'**

என்று கவி வரிகள் தொடர... தந்தைக்காகவே நூலைச் சமர்ப்பணம் செய்துள்ளார் கவி தருநர்.

**'படுக்கையில் துயிலும் வரை
பழங்கதைகள் பல சொல்லி
வாசிக்க வழிகாட்டி
தாய்க்குப் பின் தாயாகி
உணவாக்கி...... உயிர் காத்து'**

என்று தந்தையை கவிவானில் உயர்த்தி வைத்தான் கவித்தனயன்.

கவிஞர் இரா.ஜெயக்குமார் கைவண்ணத்தில் உதித்த கவிமலர்களில், என் நாசி வரை சென்று, அடிநெஞ்சில் ஆழ்ந்து நான் அடிக்கடி இரை மீட்ட கவிதைத் தாள் 'புயலுக்குள் முயலும் நான்'.

**மழை புயலின் போது
பற்றைகளில் பதுங்கும்
முயல் ஒன்று கண்டேன்!
நான் வாழும் வெளியில்
புயல் என்ன வந்தாலும்
முயலும் முயற்சியாளன்
நான் (கவிஞன்) என்று கொண்டேன்!**

சமகால பிரச்சினைகள் பலவற்றை எள்ளல் உணர்வும், எதுகை மோனையும் விரவி வர கவித்தேனாய் கொட்டியுள்ளார் கவிஞர்!

**'விலையும் உலையும்'.. என்ற கவிதையில்
'அழுகின்ற பிள்ளைகளை
ஆறுதல் படுத்துதற்கோ
பால்மா இல்லையென்று
பரிதவிக்கும் பெற்றோர்கள்!**

**பெற்றோலும் டீசலும்
பெறுதலே கடனென்று
தெருவோரம் தவம் செய்யும்
வாகனப் பேரணிகள்! ....'**

என்று அது தொடர்கிறது. இது வரலாற்று பதிவாகும் இலக்கிய மூலாதாரம்.

கற்றோரைக் கற்றோர் காமுறுவர்.

கவிஞர் தன் இளமைக் காலங்களில் அடிக்கடி உச்சரித்த பாடல்களைத் தந்த கவிஞர் கண்ணதாசனை நயந்து வியந்து எழுதியுள்ளார்.

**'சிறு கூடற் பட்டியிலே
சிறகடித்த கவிக்குயிலே
சினிமாத் திரையரங்கால்
கண்டெடுத்த முத்து ஐயா!'**

சொல்லிக் கொண்டே போகலாம். வரையறைகள் தடுக்கின்றன.

முத்தாய்ப்பாய் இறுதிக் கவிதையாக.......

**'போதைப் பொருள் பெருகி
பாதைகளை மாற்றுதலும்
அரசைத் துறந்த மகான்
அரசடியில் குந்துதலும்
பச்சைவேலிகளே
பயிர்களை அழித்தலும்......'**

இவ்வாறு கவிஞர் தான் கண்டு, கேட்டு, உணர்ந்த விடயங்களை பேனா முனையினால் கவியாக்கித் தந்துள்ளார். இனியும் தருவார். நூற்பழக்கம் அருகி வரும் நம் நாட்டில் நல்ல நூல்களை வாசிப்போம்!



# என்று தணியும் இந்த வெளிநாட்டு மோகம்?

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகப் பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களாக அதிகரித்திருக்கின்றன என்று எச்சரித்திருக்கின்றார் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த. யாழ்ப்பாணத்தில் இந்த மாதத்தில் மட்டும் சுமார் 10 முறைப்பாடுகள் இவ்வாறாகப் பதிவாகியிருக்கின்றன. அண்ணளவாக ஆறு கோடி ரூபா வரையில் மோசடி செய்யப்பட்டிருக்கின்றது என்றும் அவர் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

வெளிநாட்டு மோகம் ஈழத்தமிழர்களுக்குப் புதிதல்ல. 1980களின் மத்திய பகுதியில் இருந்து இந்த மோகம் தமிழர்களிடத்தில் ஆழமாக ஊடுருவி - விரவியிருக்கின்றது. பல்லாயிரம் தமிழ் அகதிகளின் வருகையை அடுத்து, அவர்களைப் பராமரிக்கச் சிரமப்பட்ட கிழக்கு ஜேர்மனி ஈழத்தமிழ் அகதிகளுக்கான கொடுப்பனவுகள் - இதர-சலுகைகள் என்பவற்றை நிறுத்தும், கட்டுப்படுத்தும் அளவுக்கு அக்காலத்திலேயே இந்த மோகம் தமிழர்களை ஆட்கொண்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக இன்றுவரையில் ஈழத்தமிழர்களின் வாழ்வியல் மேற்குலகங்களுக்கு அகதிகளாகப் படையெடுப்பதற்கும் பழக்கப்பட்டே விட்டது. 2009ஆம் ஆண்டுகளின் பின்னர் இந்த மோகம் எம் சமூகத்தில் இன்னமும் தீவிரமாகியிருக்கின்றது. முதலில் போரின் வெம்மையில் இருந்து உயிரைக் காப்பாற்றுவதற்காக புலம்பெயர்ந்து சென்ற எம்மவர்கள், நாளடைவில் வருமானமீட்டலுக்காக வெளிநாடு செல்வதை தங்கள் கட்டாயக்கடமையாக, பிறவிப்பயனாக நினைக்கத் தொடங்கிவிட்டார்கள். இலங்கையில் இப்போதிருக்கும் தமிழர்களின் சனத்தொகையை விடவும், புலம்பெயர் தேசங்களில் இருப்போரின் எண்ணிக்கை அதிகமே. அந்தளவுக்கு வெளிநாட்டு மோகம் இங்கு தலைவிரித்தாடுகின்றது.

இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கின்றது. நாளுக்கு நாள் வாழ்க்கைச்செலவுகள் அதிகரித்துச் செல்கின்றன. இலங்கை ரூபாவைக் கொண்டு பொருளாதாரத்தைக் கட்டமைத்துக் கொண்டுள்ள ஒரு குடும்பம் அதன் சொந்த மண்ணில், மண்ணுக்கே உரித்தான பண அலகில் வாழமுடியாத நிலையில் ரூபாவை விடவும் பலநூறு மடங்கு பெறுமதி அதிகரித்துள்ள [illegible] யூரோவும், டொலரும் [illegible]லேயே வாழ்க்கைச் செலவு [illegible] செல்லும் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் புலம்பெயர்வுகள் தவிர்க்க முடியாதவையாகின்றன. ஆனால், முறையான - சட்டபூர்வமான - புலம்பெயர்தலுக்கு எத்தனையோ வழிகள் இருக்கையில், இடைத்தரகர்கள் என்ற பெயரில் வரும் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் பணத்தை இலட்சங்களில் கொட்டுவதென்பது எப்படித் தகும்?

இங்கே பணத்தைப் பறிகொடுத்தவர்களில் பலர், முகத்துக்கு முகம் பழக்கமில்லாதவர்களிடமே பறிகொடுத்திருக்கின்றனர். பேஸ்புக் உள்ளிட்ட செயலிகளில் அறிமுகமாகும் நபர்களிடம் 'வெளிநாடு' என்ற ஒற்றைச் சொல்லுக்காக இலட்சங்களைக் கொட்டிக் கொடுத்திருக்கின்றனர்.

இந்தப் பணப்பரிமாற்றத்துக்கான நம்பிக்கை எங்கிருந்து கிடைத்தது? தாம் ஏமாற்றப்படலாம் என்ற சாத்தியங்களை, யதார்த்தத்தை, உண்மையை உணர்வதற்கும், அவர்களின் அகக்கண்கள் திறக்கப்படுவதற்கும் எதிராக, 'வெளிநாட்டு மோகம்' அவர்களை குருடர்களாகவும், சிந்தனை வறட்சியுடையவர்களாவும் மாற்றியிருக்கின்றது.

மேற்கத்தேய தேசங்களிலும் இப்போது பணவீக்கம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. வேலை வாய்ப்புகள் இல்லாமலாகிக் கொண்டிருக்கின்றன போர்ச்சூழல் நிலவும் பலஸ்தீனம், சிரியா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அகதிகள் படையெடுப்பு அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இத்தனையையும் தாண்டி அங்குபோய் டொலரையோ அல்லது யூரோவையோ ஈட்டி இலங்கைக்கு அனுப்புவது ஒன்றும் மரத்தில் காய்த்துத் தொங்கும் காசுத்தாள்களைப் பிடுங்கும் செயலல்ல. எல்லாவற்றையும்விட குளிர், வெயில் இதையெல்லாம் தாண்டிய ஓட்டமும், அதற்கான வாழ்க்கைச் செலவும் அங்கு மிகையதிகம். இங்கு நீங்கள் ஆடம்பர வாழ்வு வாழவேண்டுமாயின் அங்கு உங்களை மீட்கச்சென்ற உயிர் அங்கலாய்த்துத் திரியவேண்டும். இந்தக் குறைந்தபட்சப் புரிதல் இருந்தாலேயே வெளிநாட்டு மோகம் குறையும். அது குறைந்தால் இப்படி முகவர்களை நம்பி காசைத் தொலைக்கும் அவலமும் மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மருத்துவர் தயாளன் அம்பலவாணர்
சத்திர சிகிச்சை நிபுணர்

# 1990!

# உயிரைக் காக்கும் இலக்கம்

தொலைபேசி இயக்கம் 1990இற்குரிய சுகப்படுத்தும் சேவை (சுவ சேரிய) - அம்புலன்ஸ் சேவையானது, தேசிய அளவிலானது. இலவசமானது. அது இந்திய மக்களின் உதவியோடு சாத்தியமாகியது. இலங்கையின் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு இது 2016ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 2018 ஜூலை மாதம் வடமாகாணத்துக்கும் அதன் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இது நீண்ட காலமாக உணரப்பட்ட மிகத் தேவையான ஒரு சேவை. இது ஏற்கனவே பல உயிர்களைப் பாதுகாத்திருக்கிறது. ஈஸ்டர் குண்டு வெடிப்பின்போதும், கொரோனாப் பெருந்தொற்றின்போதும் இந்தச் சேவையின் தாற்பரியம் உணரப்பட்டது. 2022ஆம் ஆண்டு இந்தச் சேவையானது 3 இலட்சத்து 44 ஆயிரத்து 623 தடவைகள் உதவியுள்ளன. அதில் 21 ஆயிரத்து 650 சேவைகள் வடமாகாணத்தில் வழங்கப்பட்டன. அதில் 26 வீதமானவை விபத்துகளோடு சம்பந்தப்பட்டவை.

இந்த அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் அத்தியாவசிய சேவைகளுக்கு உரியவர்கள். பொதுவான மருத்துவ அவசர தேவைகளுக்கும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ சேவைகளுக்கும் அவர்கள் பயிற்றப்பட்டிருக்கிறார்கள்.

மீளப்புதுப்பித்தலுக்கான பயிற்சியை கிரமமாகப் பெறவேண்டியது இந்தச்சேவையினர் எதிர்கொள்ளும் முக்கியமான சவால்களில் ஒன்று. குறிப்பாக, பெருந்தொற்று நோயின் போதும் பொருளாதார நெருக்கடியின் போதும் அவ்வாறு இந்தச்சேவையில் ஈடுபடுபவர்களுக்கு பயிற்சியளிக்கவேண்டியிருந்தது. இப்பொழுது களனி பல்கலைக்கழகத்தில் இந்தச்சேவை வழங்குநர்களுக்கான டிப்ளோமோ கற்கை ஒன்று நடத்தப்படுகின்றது. இப்போது நடக்கும் பயிற்சிகளை பிரித்தானிய, பேக்கிங்காம்ஷியர் நியூ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆறு பரா மெடிக்கல் உறுப்பினர்கள் வழங்குகிறார்கள். அவர்கள் இங்கு ஒக்ரோபர் மாத இறுதியிலிருந்து சில காலம் தங்கியிருந்து பயிற்சிகளை வழங்கினார்கள். கொழும்பு, தம்புள்ள, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இடங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தக் குழு தொண்டு அடிப்படையில் இங்கு வந்திருக்கின்றது. இந்தக்குழுவுக்கு பேராசிரியர் வில் ப்ரோட்டன் தலைமை தாங்குகிறார். அவர் யாழ்ப்பாணத்துக்கு இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் வந்துள்ளார். வடமாகாணசபையின் அம்புலன்ஸ் சேவையில் ஈடுபடும் குழுவினருக்கு அவர் பயிற்சி வ[illegible]யிருக்கிறார். இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் பயிற்சியை வழங்குவதற்கு தேவையான குழுவினரை அவர் மிக மகிழ்ச்சியோடு ஒழுங்குபடுத்தினார்.

இந்தப் பயிற்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்கள் நடந்தன. வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 65 நோயாளர் காவு வண்டி அலுவலர்கள் இந்தப் பயிற்சியை பெற்றுக்கொண்டார்கள். இந்தப்பயிற்சிகள் மிகவும் பிரயோசனமானவை என்று அவர்கள் கூறினார்கள். வருங்காலத்தில் அவசர மருத்துவ கவனிப்புக்குத் தேவையான தொழில்சார் அறிவை அது மேலும் விருத்தி செய்திருப்பதாகவும் கூறுகிறார்கள்.

இவர்களுடைய ஆர்வம் மற்றும் ஈடுபாட்டைக் குறித்து பிரித்தானியாவிலிருந்து வந்த பயிற்றுவிப்பாளர்களும் திருப்தி தெரிவித்தார்கள். இந்தக்குழுவினர் ஆண்டுதோறும் இலங்கைக்கு வர விருப்பம் தெரிவித்துள்ளார்கள். ஸ்ரீலங்கா எயார் லைன் நிறுவனம் இந்தப்பயிற்றுநர்களுக்கு இலவச விமான பயணச்சீட்டுகளை வழங்கியதன்மூலம் இந்தப்பயிற்சித் திட்டத்தைச் சாத்தியமாக்கியது. மேலும், விமானப் பயணச்சீட்டுக்குரிய வரிப்பணத்தை, இலங்கைத் தமிழர்களால் உருவாக்கப்பட்ட பன்னாட்டு மருத்துவ சுகாதார அமைப்புச் செலுத்தியது.

1990 இலவச அம்புலன்ஸ் சேவை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு இருந்த போதிலும், அது இலவசமாகக் கிடைக்கும் சேவை என்பதில் உள்ள முக்கியத்துவத்தைக் குறித்துப் போதிய புரிந்துணர்வு மக்கள் மத்தியில் இல்லை. இந்த அம்புலன்ஸ் குழுவினர் பொதுவான மருத்துவ அவசர நிலைமைகளின்போதும், விபத்துகளில் கடுமையாகக் காயப்பட்டவர்களுக்கும், உதவக்கூடிய பயிற்சிகளைப் பெற்றிருக்கிறார்கள். இதன் பொருள் என்னவென்றால், மருத்துவ சிகிச்சையானது விபத்து நடந்த இடத்திலேயே தொடங்குகிறது என்பதுதான். ஆனால் நோயாளிகளை தனியார் வாகனங்களில் காவும்பொழுது அது கிடையாது. மருத்துவமனைக்குப் போகும்வரை அவர்கள் சிகிச்சைக்காகக் காத்திருக்கவேண்டும். அது மேலும் அவர்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

இந்த இலவச அம்புலன்ஸ் சேவைக்கு ஒரு அலைபேசிச் செயலி உண்டு. அதனை திறன் பேசிகளில் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். அந்த இலக்கத்துக்கு அழைத்தால் ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தின்மூலம் அழைப்பு வந்த இடத்தை விரைந்து கண்டுபிடிப்பார்கள். பொதுமக்கள் அந்தச் செயலியைப் பயன்படுத்தவேண்டும். அதை உண்மையான, அவசர மருத்துவ நிலைமைகளின்போது தான் பயன்படுத்தப்படலாம் என்பதனை பொதுமக்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது முக்கியமானது. இச்சேவையைத் துஷ்பிரயோகம் செய்வது உண்மையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் இந்தச் சேவையை உடனடியாகப் பெறுவதைப் பாதிக்கும். இப்பொழுது வடமாகாணத்தில் அழைப்புக் கிடைத்த 12 நிமிடங்களில் சேவை கிடைக்கின்றது. இது மேலும் வெற்றி பெற தெருக்களில் ஏனைய வாகன சாரதிகள் மேலும் பொறுப்புணர்வோடு நடந்து ஒத்துழைக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது.

இந்தச் சேவை மேலும் விருத்தி செய்யப்பட வேண்டும். அரசாங்கம், சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் முழுமையான ஆதரவின் மூலமே அது சாத்தியமாகும்.

இப்பொழுது நடந்து முடிந்திருக்கும் பயிற்சித் திட்டமானது, தரமான கவனிப்பு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும். 1990 சேவை உயிர்களைப் பாதுகாப்பதற்கும் அதைத் தொடர்ந்து செய்வதற்கும் உதவியிருக்கின்றது.











போதைப்பொருள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கண்காட்சியொன்று அண்மையில் இடம்பெற்றது. மாணவர்கள், ஊடகக்கற்கை மாணவர்கள் உட்படப் பல தரப்பினரும் ஆர்வத்துடன் இந்தக் கண்காட்சியில் கலந்துகொண்டனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பு எனும் சுவாசிப்பு!

சி.நற்குணலிங்கம்

எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட உரையின் எழுத்துகளைப் பார்த்து சொற்களைப் புரிந்து, பொருள் அறிந்து, கருத்து உணர்தல்தான் வாசிப்பு. வாசித்தல் எழுத்தறிவின் ஓர் அடிப்படைக்கூறு. இன்றைய அன்றாட வாழ்க்கைக்கு வாசித்தல் அவசியமானது. வரிவடிவத்தில் உள்ள சொற்களை ஒலி வடிவமாக மாற்றி உச்சரிக்கும் உறுப்புகளும் சொற்களை நோக்கும் கண்களும் ஒத்துழைத்தால் தான் வாசிப்பு சரிவர நடைபெறும். புத்தகம் வாசித்தல் என்பது ஒரு மனிதனிடம் இருக்கக்கூடிய சிறந்த பண்புகளில் ஒன்றாகும். புத்தகம் ஒரு சிறந்த நண்பன் என்றால் அது மிகையாகாது.



வாசிப்பு நெஞ்சுக்கு நெருக்கமானது. வாசிப்பு அறிவை வழங்கும் அமுதசுரபி. ஆனால் இன்றோ வாசிப்பு என்பது அருகிச்செல்லும் ஒரு பழக்கமாக மாறியிருக்கின்றது.

வாசிப்பில் காணல், உச்சரித்தல், பொருள் உணர்தல் என்ற மூவகைக் கூறுகள் அடங்கியுள்ளன. வாசிப்பில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று மேல்போக்கான வாசிப்பு. இது ஒரு குறுகிய வாசிப்பாக இருக்கும். இரண்டு ஆழ்ந்த அறிவு சார்ந்த வாசிப்பு. இவ் வாசிப்பு முறையானது தனிமனிதர்களின் வாழ்க்கையை மட்டுமல்ல பல்வேறு சமூகங்களின் வாழ்க்கை நிலையையும் மாற்றிப்போட்ட வாசிப்பு. மொழித்திறன்கள் நான்கு. அவை கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவை. வாசிப்புத் திறனும் எழுத்துத்திறனும் திட்டமிட்டு கற்பிக்கப்படவேண்டியவை. வாசித்தல் ஒரு கொள்திறன் ஆகும். நாளடைவில் கேட்டல் திறனுக்குப் பதிலாக வாசிப்புத் திறனே ஒருவரின் அறிவாற்றலுக்கு மூலமாக அமைந்துவிடுகிறது. வாசிப்பு எனும் அழகான பயன்கள் மிகுந்த பழக்கத்தை நாம் பயன்படுத்துவதுடன் இளைய தலைமுறைக்கு நாம் எடுத்துச்செல்லவேண்டும். தொடர்ந்து அதன் முக்கியத்துவத்தை உணர்த்தவேண்டும். அப்போதுதான் நவீன தொழில்நுட்பத்தின் பாதகமான கலாசார அரக்கர்களின் முன்னால் நாம் அடிமைகளாய் மொழி, இனஉணர்வின்றி கவிழ்ந்து கிடக்கும் இழிநிலை மாறும்.

### வாசிப்பின் நோக்கங்கள்

வாசிப்பின் நோக்கங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது சிறப்பு நோக்கம். உறுதியான நோக்கத்தைக் கொண்டுள்ளது. வாசிக்கும் பகுதியை விரைவாக கிரகித்து புரிந்துகொள்ளும் ஆற்றல் கிடைக்கக் கூடியதாகும்.

இது ஆர்வத்தை ஊட்டுவதுடன், சிந்தனை ஆற்றலைப் பெருக்கும். இரண்டாவது: தொடர் நோக்கம். இது பிரச்சினைகளைக் களைய, சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வாழ்வைச் செம்மையாக்க, அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக்கொள்ள, வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள உதவும். மூன்றாவது பொதுநோக்கம். இது பொது அறிவை வளர்த்துக்கொள்ள, இலக்கியச் சுவையைப் பருக உதவும்.


வாசிப்பு பல்வேறு வழிகளில் மனிதருக்கு உதவுகின்றது. வாசிப்புப் பழக்கம் மூளைக்கு ஒரு சிறந்த பயிற்சி, நினைவாற்றலை வலுப்படுத்தும், எழுத்தாற்றல், படைப்பாற்றல், சிந்தனைத்திறன் என்பவற்றை வளர்க்க உதவும். உடலுக்கு உடற்பயிற்சிபோல வாசிப்பு நம் உள்ளத்துக்கான பயிற்சி. வாசித்தால் கவனிப்புத் திறன் அதிகரிக்கும். எந்த ஒரு செயலையும் கவனத்தோடு செய்யும் ஆற்றல் மேம்படும். ஒரு மகிழ்ச்சியான பொழுதுபோக்கு, நம்மை வேறு ஒரு உலகத்துக்கு இட்டுச்செல்லும். மன அழுத்தத்தில் இருப்பவர்க்கு இது ஒரு புதிய சூழலைக் கொடுத்து புத்துணர்வை ஏற்படுத்தும். மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும். வாசிப்பு மொழியில் புலமை தருகிறது. மொழிவளம் பெருகுகிறது. இந்த உலகில் ஒரு மனிதன் எந்தளவுக்கு நூல்களை வாசிக்கிறானோ அந்த அளவுக்கு அவன் அறிவைப் பெற்றுக்கொள்கிறான். வாசிப்பு என்ற பதத்தினூடாகத்தான் கல்வி மக்களிடையே கூர்ப்படைந்தது. ஆக்கபூர்வமான வலுவூட்டும் சுழற்சிமுறையை மேம்படுத்திக்கொள்ள, தன்நம்பிக்கை உள்ளவராக மாற, மனதை ஆற்றுப்படுத்த, மனம் சுத்திகரிக்கப்பட, மனித மனங்கள் உழுது பண்படுத்தப்பட வாசிப்பு உதவுகின்றது.

### வென்றவர்களின் இரகசியம்

உலகின் வெற்றிகரமான மனிதர்கள், தலைவர்கள் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். நூலகத்தை முழுநேரமும் பயன்படுத்தும் பழக்கமுள்ள அம்பேத்கரால்தான் உலகிலேயே சிறந்த அரசமைப்புச் சாசனத்தை வழங்கமுடிந்தது. மாவீரன் பகவத்சிங் தூக்கில் இடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பதாகக்கூட புத்தகம் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தார் என்பது வரலாறு. மகாத்மாகாந்தியிடம் உங்களுக்கு ஒருகோடி ரூபா கிடைத்தால் என்ன செய்வீர்கள்? எனக் கேட்டபோது மிகச் சிறந்த நூலகம் ஒன்றை அமைப்பேன் என்றார். யாருமற்ற தனிமைத் தீவில் தள்ளிவிட்டால் என்ன செய்வீர்கள்? என்று ஜவஹர்லால்நேருவிடம் கேட்டபோது புத்தகங்களுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவேன் என்றார். நெல்சன்மண்டேலா சிறையில் அடைக்கப்பட்டிருந்தவேளை உங்களுக்கு என்ன சலுகை சிறைச்சாலையுள் வேண்டும் என்று கேட்ட போது புத்தகங்கள் படிப்பதற்கு அனுமதித்தால்போதும் என்றார். மனிதனது கண்டுபிடிப்புகளில் மிகச் சிறந்த கண்டுபிடிப்பு எது? என ஐன்ஸ்டீனிடம் கேட்டபோது புத்தகங்கள்தான் என்றார். நஞ்சு கொடுக்கப்படும்வரை கிரேக்க நூல்களை படித்துக்கொண்டிருந்தார் சோக்கிரட்டீஸ். படிப்பகங்களுக்கு அருகில் உறங்கும் இடத்தைக் கேட்டார் அம்பேத்கர். தான் படித்த புத்தகத்தை முடித்துவிடவேண்டும் என்பதற்காக அறுவைச் சிகிச்சையை தள்ளிப்போடச் சொன்னார் அறிஞர் அண்ணா. முப்பத்துமூன்று ஆண்டுகள் நூலகத்தில் மூழ்கி 'மூலதனம்' எனும் கம்யூனிச சித்தாந்தத்தைக் கண்டுபிடித்தார் கார்ல்மாக்ஸ். இவர்களை இந்த உலகம் போற்றக் காரணம் வாசிப்பினால் இவர்கள் பெற்றுக்கொண்ட புத்திக்கூர்மையே.

நாட்டின் பொக்கிஷங்களில் நூலகங்களும் அடக்கம். அங்கே அடங்காதவர்கள் வாழ்வில் அடங்காப்பிடாரிகளாகவே இருப்பர். நூலகம் செல்வது சாலச் சிறந்தது. இன்றைய மக்களில் நேரத்தை வீண் விரயமாக்குகிறார்கள். அதுமட்டுமல்ல பணத்தையும் வீண் விரயமாக்குகிறார்கள். அந்தப் பணத்தை புத்தகங்கள் வாங்க செலவு செய்வது பிரயோசனமானதாகும். புத்தகங்கள் வாங்கச் செய்யும் செலவு அல்ல, மாறாக அது முதலீடே. வாசிப்பை சுவாசமாகக்கருதி நேசிப்போமாக. ◆

# சமூக மாற்றத்தில் கல்வியின் பங்கு



சரவணபவான் வாசுகன்
இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு
பிள்ளை நலத்துறை
கிழக்கு பல்கலைக்கழகம்

கல்வி என்பது பிள்ளையின் ஆற்றல்களை வெளிக்கொணரும் மாபெரும் மூலமாகும். சிறந்த சமூகத்தின் உருவாக்கத்துக்கும் கல்வியே இன்றியமையாததாகின்றது. அந்த வகையில் ஒரு சமூகத்தின் முன்னேற்றம், சமூகத்தின் நகர்வு, சமூக வளர்ச்சி, எழுச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றைத் தீர்மானிக்கும் சக்தியாக கல்வியே காணப்படுகின்றது. இன்றைய நவீன மாற்றங்களுக்கு ஏற்ப கல்வி என்பது அனைவருடைய வாழ்விலும் பின்னிப்பிணைந்த ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற முக்கூட்டமைப்பை ஒழுங்குபடுத்துவதே கல்விதான். சமூக மாற்றம் என்பது சமூகத்தின் அனைத்து விடயங்களிலும் ஏற்படக்கூடிய ஒருபொதுவான விடயம் தான். ஆனால், இந்தச் சமூக மாற்றத்தை சிறப்பான ஒன்றாக மாற்ற சிறந்த ஆயுதம் கல்வியே ஆகும். அன்று நாட்டுக்கு ஓரிருவர் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தனர். இன்றோ வீட்டுக்குவீடு கற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பிளேட்டோவின் கருத்துப்படி கல்வியால் நல்ல மனிதர்கள் உருவாவது மட்டுமல்லாது, அவர்கள் நல்ல முறையில் செயலாற்றவும் வேண்டும்.

இன்று போதைப்பொருள்கள் சமூகத்தில் ஆழமாக ஊடுருவியுள்ளன. எனவே இந்தப் போதைப் பொருள்களை வேரறுப்பதற்கு இருக்கக்கூடிய ஓர் ஆயுதமாக நாம் கல்வியைப் பயன்படுத்தவேண்டும். பாடசாலையில் ஆரம்பித்து பல்கலைக்கழகங்கள் வரையில் இந்தச் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாகவும் ஆத்மார்த்தமாகவும் மேற்கொள்ளும் பட்சத்தில் போதையின் பிடியிலிருந்து மாணவர்களை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தச் சமூகத்தையும் விடுவிக்கலாம். கல்வி என்பது சக்தி வாய்ந்த அணுகுண்டு. இதன் தாக்கம் சமூகத்தை நல்ல நிலைக்கு உயர்த்துமே அன்றி வீழ்த்திவிடாது. கல்வி என்பது அனுபவங்களை ஒழுங்குபடுத்துவதும் மீள அமைப்பதுமாகும். கற்றல் அனுபவம் என்பது வாழ்வின் மிகச்சிறந்த ஓர் அங்கமாகும்.

இன்றைய சமூகத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் என்ற விடயமானது அனைவராலும் பேசப்படும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. குடும்ப வறுமை, பெற்றோரின் கவனவீனம் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் குழந்தைத் தொழிலாளிகளின் பெருக்கத்துக்குக் காரணமாக இருக்கின்றன.

இந்த விடயத்தில் அரசு மட்டத்தில் கவனம் செலுத்தப்படவேண்டும். குழந்தைகளும், சிறுவர்களும் எவ்வளவுக்கெவ்வளவு கல்வியை நோக்கி வழிப்படுத்தப்படுகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு சமூகத்தில் ஆக்கபூர்வமான மாற்றத்தை அவதானிக்க முடியும். இதன் தாற்பரியத்தை அனைவரும் உணர்ந்தவர்களாக கல்விக் கட்டமைப்பைப் பலப்படுத்த நாங்கள் ஒன்றிணைய வேண்டும். ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



**கலாபூஷணம் இராசையா பீதாம்பரம் (பற்குணம்)**

**(ஸ்தாபகர் - வண்ணை கலைவாணர் நாடக மன்றம்)**

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பீதாம்பரம் (பற்குணம்) அவர்கள் நேற்றுமுன் தினம் (20.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2023) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**


# நிறைவேற்று அதிகாரமூடாகவே குடியுரிமை இரத்து வழங்கலாம்

**கூறுகிறார் நீதியமைச்சர்**

பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமென குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ராஜபக்சக்களின் குடியுரிமையை இரத்துச் செய்வதாயின் அமைச்சரவை அனுமதி மற்றும் நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் என்பன அவசியம்.

- இவ்வாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே இருக்கின்றது. அந்த நிதியை நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலோ, பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய வைக்கும் விதத்திலோ அல்லது மோசடியில் ஈடுபடுவதற்காகவோ பயன்படுத்தினால் அதற்கு நிறைவேற்று அதிகாரம் பொறுப்புக்கூற வேண்டும். அந்தவகையில் நீதிமன்றத் தீர்ப்புக்கு நிறைவேற்று அதிகாரம் கட்டுப்படவேண்டும்.

தேவையேற்படின் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைத்து இது தொடர்பில் விசாரிப்பதற்கு ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கும் அதிகாரம் உள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தவறிழைத்துள்ளனர் என அந்த ஆணைக்குழு பரிந்துரைக்கும்பட்சத்தில், அதனை அடிப்படையாகக்கொண்டு குறிப்பிட்ட நபர்களின் குடியுரிமையை ஏழாண்டுகளுக்கு இல்லாது செய்யும் யோசனையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கலாம்.

அமைச்சரவையின் அனுமதியுடன்தான் இந்த யோசனையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரமுடியும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் அவசியம் - என்றார். (ச-44)


## கேள்வி அறிவித்தல்

### சபைநிதி வேலைத்திட்டம் - 2023

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ,மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020(i) ஆம் இலக்க 2021.01.11 ஆம் திகதிய 04/2016(iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 2023.02.09 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும். அட்டவணை ஒன்றில் குறிப்பிடப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராக இருத்தல் வேண்டும். அட்டவணை இரண்டில் குறிப்பிடப்பட்ட வேலைக்கு பொருத்தமான வியாபார பதிவினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், உள்ளுராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 22.11.2023ந் திகதியிலிருந்து 05.12.2023ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர், உள்ளுராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 06.12.2023ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2023.11.30 ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**அட்டவணை I**

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | i) சங்கரப்பிள்ளை கிளை வீதி புனரமைப்பு, மானிப்பாய் தெற்கு NP/14/41(16)/W/CF/2023/25 | 2.53மி. | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 25,300.00 | 05.03.2024 |
| 02 | i) CPM வீதி புனரமைப்பு, நவாலி தெற்கு ii)சின்னப்பா வீதி 3ம் கிளை ஒழுங்கை புனரமைப்பு நவாலி கிழக்கு NP/14/41(16)/W/CF/2023/26 | 2.16மி. | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 21,600.00 | 05.03.2024 |
| 03 | i) பிடாரியம்மன் வீதி 3ம் ஒழுங்கை புனரமைப்பு ஆனைக்கோட்டை ii) சோமசுந்தரம் வீதி உள்ளக வீதிகள் புனரமைப்பு, ஆனைக்கோட்டை iii) கேணிக்கட்டு வீதி புனரமைப்பு, சுதுமலை வடக்கு NP/14/41(16)/W/CF/2023/27 | 3.31மி. | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 33,200.00 | 05.03.2024 |
| 04 | i) நாச்சிமார்கோவில் வீதி புனரமைப்பு சண்டிலிப்பாய் கிழக்கு NP/14/41(16)/W/CF/2023/28 | 1.00 | 45 நாட்கள் | C9 and C8 (வீதி | 23.01. 2024 | 10,000.00 | 20.02.2024 |
| 05 | i) வைரவர் கோவில் வீதி புனரமைப்பு சண்டிலிப்பாய் மத்தி ii) காளிகோவில் கிளை ஒழுங்கை புனரமைப்பு, சண்டிலிப்பாய் மத்தி iii) கம்மாலை 1ம் குறுக்கு வீதி சண்டிலிப்பாய் வடக்கு NP/14/41(16)/W/CF/2023/29 | 2.77மி | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 27,700.00 | 05.03.2024 |
| 06 | i) சென் அன்ரீஸ் வீதி புனரமைப்பு, பண்டத்தரிப்பு ii) கண்ணகியம்மன் வீதி புனரமைப்பு, மாகியப்பிட்டி NP/14/41(16)/W/CF/2023/30 | 2.15மி | 60 நாட்கள | C9, C8 and C7 (வீதி) | 06.02. 2024 | 21,500.00 | 05.03.2024 |
| 07 | i) செம்மண்வயல் வீதி புனரமைப்பு, மாதகல் கிழக்கு ii)ஆத்தியோலை வீதி புனரமைப்பு, பெரியவிளான் NP/14/41(16)/W/CF/2023/31 | 2.08மி | 60 நாட்கள் | C9, C8 and C7 (வீதி | 06.02. 2024 | 20,900.00 | 05.03.2024 |

**அட்டவணை II**

| தொ. இல | விபரம் மற்றும் கேள்வி இலக்கம் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்திற்கான தளபாடங்கள் பொருத்துதல் NP/14/41(16)/03/A5/Fu/2023 | 30 நாட்கள் | 23.01.2024 | 11,700.00 | 20.02.2024 |
| 02 | வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்திற்கான வளிச்சீராக்கிகள் பொருத்துதல் NP/14/41(16)/03/A5/AC/2023 | 30 நாட்கள் | 23.01.2024 | 3,250.00 | 20.02.2024 |

**தலைவர்,**

**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**


# தமிழ்க் கட்சிகள் வகிபங்கு ஒன்றுகூடிக் கருத்தாடல்

யாழ்ப்பாணம், நவ.22

'இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்யவேண்டியவை?' எனும் தொனிப்பொருளில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கூடி கலந்துரையாடியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு சிவில் சமூகக் குழுவின் ஏற்பாட்டில் தந்தை செல்வா கலையரங்கில் இந்தக் கருத்தாடல் அண்மையில் இடம்பெற்றது.

பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துரைகளை அரசியல் ஆய்வாளர்களான அ. யதீந்திரா, நிலாந்தன் மூத்த ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம் ஆகியோர் வழங்கினர்.

கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்றனர். (ச-27)

## பாதீடு மீதான

# இரண்டாவது வாசிப்பு நேற்று நிறைவேற்றம்!

கொழும்பு, நவ. 22

2024ஆம் ஆண்டு பாதீட்டின் மீதான இரண்டாவது வாசிப்பு, 45 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது. பாதீட்டுக்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் கடந்த 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. நவம்பர் 14ஆம் திகதி முதல் நேற்றுவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது. நேற்று மாலை 6 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட ஆளும் கட்சியினர் ஆதரவாக வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டலஸ் அணி, விமல் அணி என்பன எதிராக வாக்களித்தன. இன்று 22ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் நடைபெறும். டிசம்பர் 13ஆம் திகதி புதன்கிழமை பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு.

01. கரைதுறைப்பற்று பிரதேச சபையானது, குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை மற்றும் சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டத்திற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர் களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், வட மாகாணத்தில் பதிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு தொலைபேசி:-024-3243542 தொலைநகல்: 0212290001 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 07.12.2023 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.30 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் இடத்திலிருந்து 22.11.2023ம் திகதியிலிருந்து 07.12.2023 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.4000.00(வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு 07.12.2023 ம் திகதி மாலை 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63(அறுபத்து மூன்று 08.02.2024) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | நிதி மூலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் | |
| 2 | NP/14/44(1)/02/05/C.F /2023 | Purchasing street light | 2.0 | 30 நாட்கள் | வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் | 20,000.00 | 07.03.2024 | Council - 2023 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 28.11.2023ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று, பிரதேச சபை, முல்லைத்தீவு.**
21.11.2023

(cr.41074) (N.1)


# நடமாடும் நூலக சேவை நாளை

யாழ், நவ. 22

நடமாடும் நூலக சேவையும், நாடக ஆற்றுகையும் நாளை வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு ஊரெழு கணேச வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பொது நூலகத்தின் ஏற்பாட்டில் வித்தியாசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச)


## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1991, உத்தரட்டாதி
Engineer,USA மணமகனுக்கு
மணமகள் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1994, சதயம்
Analysist France மணமகனுக்கு
மணமகள் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1992, கார்த்திகை
Engineer,Singapore மணமகளுக்கு
மணமகன் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V),1991, விசாகம்
Accountant Switzerland மணமகனுக்கு
மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1989, உத்தராடம்
Veterinary Surgeon,Canada
மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1990, உத்தரம்
Trainee Canada மணமகளுக்கு
மணமகன் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com


# பணவீக்கம் அதிகரிப்பு!

கொழு, நவ. 22

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, இலங்கையின் பணவீக்கம் ஒக்ரோபர் மாதத்தில் ஒரு வீதத்தால் அதிகரித்துள்ளது என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.(அ-ம)


# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 03 . 1954



மறைவு
20 . 11 . 2023

## சதாசிவம் சிவநேசதாசன் (ராசன்)

சுதுமலை வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு புதுச்செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவநேசதாசன் (ராசன்) நேற்றுமுன்தினம் (20.11.2023) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் செல்லம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசமலர், இராசபூபதி, பகவதி, நித்தியானந்தவதி, சிவராமகிருஷ்ணன், சதானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திலகராணி, செல்வராணி, சியாமளா, யோகநாதன், வரதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் நாளை (23.11.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **சுதுமலை மேற்கு, மானிப்பாய் எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது பெறாமகனின் இல்லத்தில் நடைபெற்று**. பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை மேற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 52922) N

# பி.ஜெ. பர்னான்டோ



கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்குபவர்கள்.
பல் கட்டுபவர்கள்
**இலவச கண் பரிசோதனை**
**P.J FERNANDO**
**DENTAL & OPTICAL WORKS**
071 797 8395 / 077 864 3992 MRS.A.Jeyakumaran
No.220, 1st Cross Street, Jaffna. (Vembady Signal Junction)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு
29.09.1949



உதிர்வு
24.10.2023

கடந்த 24.10.2023 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் தனபாலசிங்கம் மகேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (21.11.2023) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (23.11.2023) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

நீர்வேலி மேற்கு,


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நீதிக்காக....

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சட்டத்தரணிகளும் இந்த நடவடிக்கையில் இணைந்துகொள்ள வேண்டும்என்று அழைப்பும்விடுக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, சித்தன்கேணியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இறப்பதற்கு முன்னர் இளைஞர் பேசிய வீடியோப் பதிவொன்றில், பொலிஸார் தன்னைச் சித்திரவதை செய்தனர் என்று கூறியிருந்தார். இளைஞனின் உடற்கூற்றுப் பரிசோதனையில் தாக்குதல் மற்றும் சித்திரவதை காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வடக்கு மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. நேற்று இளைஞனின் இறுதிக் கிரியைகள் பெரும் எண்ணிக்கையான மக்களின் பங்கெடுப்புடன் நடந்தன. உயிரிழந்த இளைஞனுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் பல தரப்புகள் வலியுறுத்தி வருகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ள நிலையில், உயிரிழந்த இளைஞனின் சார்பாக 40 க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்னிலையாகத் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக 'உதயனுக்கு' கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா, 'இளைஞனின் மரணம் கொலை என்பது தெட்டத் தெளிவானது. இந்த வழக்கு நடவடிக்கையில் அனைத்துச் சட்டத்தரணிகளும் இணைந்துகொள்ள வேண்டும். பிரதானமாக குற்றவியல் வழக்குகளில் அனுபவம் வாய்ந்தவர்களும் இணைந்துகொள்ளவேண்டும்' என்று அழைப்பு விடுத்தார்.

'எதிர்வரும் 24ஆம் திகதி வழக்கு நடைபெறவிருக்கின்றது. அன்று அவரது உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. தொடர்ச்சியான சித்திரவதையால்தான் இளைஞர் மரணமடைந்துள்ளார். இந்தக் கொலை தொடர்பாக உரிய சட்ட நடவடிக்கை பொலிஸ் தரப்பால் விரைவாக எடுக்க வேண்டும். அனைத்து விடயங்களும் நீதிமன்றத்துக்கு வரவேண்டும். இந்தக் கொலைக்குக் காரணமான அனைவரும் நீதிமன்றில் உடனடியாக முற்படுத்தப்படவேண்டும்.

இந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இந்த நோக்கத்துடன் யாழ்ப்பாணம் நீதிமன்றில் விண்ணப்பங்களை முன்வைப்போம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சட்டத்தரணிகள் அனைவரும் இந்த நடவடிக்கையில் இணைந்துகொள்ளவேண்டும். பொலிஸ் காவல் மரணம் என்பது சட்டத்தின் ஆட்சிக்கே விடுக்கப்பட்ட பகிரங்க சவால் அதை நாம் எதிர்கொள்வோம்' என்று அவர் மேலும் தெரிவித்தார். இந்த வழக்கின் முதற்கட்ட நடவடிக்கைகளில் சட்டத்தரணிகளாக திருக்குமரன், ரிசிகேசன், மயூரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-26)

## மாவீரர்...

பாணம் நல்லூரில் நினைவாலயம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ஆம் திகதியிலிருந்து, 2009ஆம் ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின்விடியலுக்காகவித்தாகியவர்களின் விவரங்களை உள்ளடக்கியதாக இந்த நினைவாலயம் நேற்றுமாலை திறந்து வைக்கப்பட்டது.

மூன்று மாவீரர்களின் தாயாரான சிவபாதம் இந்திரவதி பொதுச்சுடரை ஏற்றி வைத்தார். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். மாநகரசபையின் முன்னாள் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். தொடர்ச்சியாக சிறுவர்களால் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்லறை திரை நீக்கம் செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம், மாநகரசபை முன்னாள் உறுப்பினர்கள், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர், பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-26-125-66)

## சட்டத்துறைப்...

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டக் கல்வியை மும்மொழிகளிலும் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்படுகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சட்டத்துறையில் ஆங்கிலமொழி மூலத்தில் மட்டும் நடத்தப்பட்டுவருகின்றது. ஏன் யாழ். பல்கலையில் தமிழ்மொழி மூலத்தில் சட்டக்கற்கையை உட்புகுத்த முடியாது? என்று யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினருமான ம.இளம்பிறையன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தமிழ் மக்களினுடைய பண்பாட்டு, பாராம்பரிய விழுமியங்களைப் பாதுகாக்கின்ற பல்கலைக்கழகமாக இருக்கின்ற நிலையைச் சிதைத்து, சிங்கள மாணவர்களையும் புகுத்துவதற்காக ஆங்கிலமூலக் கற்கைநெறி உட்செலுத்தப்படுகின்றது. வடக்கு-கிழக்கிலே புதிய பல்கலைக்கழகங்களை தொடங்குதல் எனும் பெயரில் ஏற்கனவே பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்குகின்ற வளாகங்களை பல்கலைக்கழகமாக தரமுயர்த்த விண்ணப்பிக்கும்போது அரசும் மிக அவசரமாக அதற்கு அனுமதி வழங்குகின்றது. ஆனால், தென்பகுதியில் எந்தவொரு பல்கலைக்கழகங்களையும் தொடங்குவதற்கு அரசாங்கம் அனுமதியை வழங்குவதில்லை, காரணம் வடக்கு - கிழக்குப் பல்கலைக்கழகங்களின் தமிழ் சாயத்தைத் சிதைத்து, தமிழ்ப் பண்பாட்டை சிதைத்து, பெரும்பான்மைச் சிங்கள மாணவர்களை இங்கு அனுமதிப்பதன் ஊடாக தமிழ் மக்களின் பல்கலைக்கழகங்கள் மீதான ஏகபோகங்களைச் சிதைப்பதைத்தான் அரசு செய்கின்றது. தமிழர்களுடைய தாயகபூமியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானபீடம், முகாமைத்துவ பீடம் மற்றும் கிளிநொச்சியிலுள்ள பீடங்களில் பெரும்பான்மையாக சிங்கள மாணவர்கள் காணப்படுகின்றனர். எமது தமிழ் மாணவர்கள் கல்வி பயில்வதற்காக யாழ். பல்கலைக்கழகத்திலே தொடங்கப்பட்ட கற்கைநெறிகள் எமது மாணவர்களுக்கு வசதி கிடைக்காமல் மாற்று மாணவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்ப் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் என்ற பெயரைக் காப்பாற்றவேண்டுமென்றால் சகல கற்கைநெறிகளும் தமிழ்மொழியிலும் போதிக்கப்பட வேண்டியது அவசியமாகும். தலைப்பீட கற்கை நெறிகளைக்கூட ஆங்கில மொழியில கற்பிக்கவேண்டும் என்ற அழுத்தத்தை அரசாங்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக எமது பல்கலைக்கழகத்துக்கு வழங்கி வருகின்றது. இருப்பினும் எதிர்ப்பின் காரணமாக அந்த முயற்சிகைகூடாமல் இருக்கின்றது. சிங்களமொழி மாணவர்கள் பெரும்பான்மையாக இருப்பதைக் காரணம் காட்டி சிங்கள ஆளணி நியமனத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை உருவாகி வருகின்றது. ஏன் சட்டத்துறையில்கூட சிங்கள நிரந்தர விரிவுரையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர்களை நியமிக்கக் கூடாதென்று யாரும் சொல்லவில்லை. ஆனால், அது எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பாக மாறும் என்பதை நாங்கள் மறுக்க முடியாது - என்றார். (அ-ம-26-125-7)

## மாவீரர் வாரம்...

பட்டுள்ளன.

**யாழ். பல்கலை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் மாவீரர் நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டுப் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அதனைத் தொடர்ந்துமலரஞ்சலியும்செலுத்தப்பட்டது. மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபிப் பகுதி பல்கலைக்கழக மாணவர்களால் வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளதுடன் தூபியைச் சுற்றி சிவப்பு, மஞ்சள் நிறத்திலான வர்ணக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன.

**வடமராட்சி**

வடமராட்சி, மாலிசந்திப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாவீரர் வார நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மூன்று மாவீரர்களின் தாயார் பொதுச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், பொது மக்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**சாட்டி துயிலுமில்லம்**

சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் நாள் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டன. நினைவுத் தூபியைத் துப்புரவாக்கும் நடவடிக்கைகளும் இதன்போது இடம்பெற்றது. பெருமளவான மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

**கோப்பாய் துயிலுமில்லம்**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்துக்கு முன்பாகவும் மாவீரர்களுக்கு நேற்று உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் மூத்த போராளி பொன் மாஸ்டர் தலைமையில் நடைபெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டதுடன் மலர்தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டது. (அ-ம-125-66-26-100)

## கைமாறியது...

ஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்துடன், இந்த வழக்கு வேறு பொலிஸாரின்கீழ் பாரப்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் நீதிமன்றம் ஏற்றுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட கைதி உயிரிழந்தநிலையில், அவருடன்கைதான மற்றையவருக்கான வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். குறித்த வழக்கை வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடமிருந்து மாற்றவேண்டும் என்ற கோரிக்கை சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட நிலையில் அந்தக் கோரிக்கையும் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-ம-27)

## சடலத்துடன்...

னுக்கு நீதிகோரி சித்தன்கேணிச் சந்தியில் சடலத்துடன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிரிழந்த இளைஞனான நாகராசா அலெக்ஸின் இறுதிச் சடங்குகள் அவரின் இல்லத்தில் நேற்று நடைபெற்றன. பெருமளவான மக்கள் ஒன்றுதிரண்டு இளைஞனுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். இதையடுத்தே அவர்கள் இளைஞனின் சடலத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ம-125)

## சித்திரவதைக்...

வதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட நிலையில், அது தொடர்பில் விசாரிப்பதற்காக மூவர் அடங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாண மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி ஆகியோரைக் கொண்ட குழுவினரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் நான்கு உத்தியோகத்தர்கள் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளார்கள் என இனங்காணப்பட்டதன் அடிப்படையில் அவர்கள் நால்வரும் தற்பொழுது மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்வாங்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன

விரைவில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரினாலும் எமக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே குறித்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை - என்றார். (அ-ம-26-125)

## கார்த்திகை...

பூங்காவில் நடைபெறவுள்ளது. கண்காட்சி நடைபெறும் மலர் முற்றம் காட்சித்திடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கிலியன் பூங்காவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தத் தொடக்க நிகழ்ச்சியில் சிறப்புரைஞர்களாக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம், சமூக அரசியற் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இந்தக் கண்காட்சி இந்த மாதம் 30ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7 மணி வரை நடைபெறவுள்ளது. கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்களுக்கு வழமைபோன்று இம்முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தை உரையாற்ற விடாமல் பெரமுனவினர் நேற்று அடாவடி!

## ஒலிவாங்கியைப் பிடுங்கியதால் சபையில் களேபரம்

கொழும்பு, நவ. 22
பொருளாதார நெருக்கடி விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பிகொண்டிருக்கையில் அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பெரமுனவினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் முன்வந்து அவர் வசம் இருந்த ஆவணங்களையும் பறித்து அடாவடி நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் சபையில் கடும் அமளி ஏற்பட்டது. சபை நடவடிக்கையும் இடைநிறுத்தப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கை முடிவடைந்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவர், பொருளாதார நெருக்கடி ஏற்படக் காரணமானோரைச் சுட்டிக்காட்டி உயர்நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு கேள்விகளை எழுப்பினார்.

அடையாளம் காணப்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?, அதற்கான காலஎல்லை, அவர்களிடம் இருந்து இழப்பு ஈடுசெய்யப்படுமா? என்பன உட்பட எதிர்க்கட்சித் தலைவர் கேள்விகளை அடிக்கிக்கொண்டே சென்றார். இதன்போது சஜித்தின் உரைக்கு பெரமுன எம்.பிக்கள் சிலர் இடையூறு விளைவித்தனர்.

ஆளுங்கட்சி பக்கம் இருந்து எதிரணி பக்கம் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இருக்கைக்கு அருகில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, திஸ்ஸ குட்டியாராச்சி, பிரசன்ன ரணவீர, ஜயந்த கெட்டகொட, டீ.வீரசிங்க உள்ளிட்ட பெரமுன எம்.பிக்கள் வந்தனர். இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் எதிர்க்கட்சித் தலைவரை சூழ்ந்து கொண்டனர்.

சர்ச்சைக்கு மத்தியிலும் தனது உரையை எதிர்க்கட்சித் தலைவர் தொடர முற்பட்டார். இதன்போது எதிர்க்கட்சித் தலைவரின் ஒலிவாங்கியை மடக்கி, தான் கருத்து வெளியிட சனத் நிஷாந்த முற்பட்டார். அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் வாசித்துக்கொண்டிருந்த அறிக்கையையும் பிடுங்கி எடுத்தார். ஐக்கிய மக்கள் சக்தியுடன் கடும் தர்க்கத்திலும் ஈடுபட்டனர். இதனால் சபையில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதனையடுத்து சபை நடவடிக்கை ஐந்து நிமிடங்களுக்கு இடைநிறுத்தப்படும் என்று சபாநாயகர் அறிவித்தார். 15 நிமிடங்களுக்குப் பின்னர் மீண்டும் சபை கூடியது.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவரின் உரைக்கு இடையூறு விளைவித்து, அறிக்கையை பறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார். எனது 35 வருடகால நாடாளுமன்ற அரசியலில் இப்படியொரு சம்பவம் நடந்ததில்லை எனவும் கிரியெல்ல சுட்டிக்காட்டினார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார். சபைகூடிய பின்னரும் சிறிது நேரம் சர்ச்சை நீடித்தது. பின்னர் சபை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-44)

## தரம் - 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள்

2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்தன. அவற்றில் பாடசாலைகள் ரீதியாக அனுப்பப்பட்ட பெறுபெறுகளின் விவரம்:-

**யாழ்.மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்**
சு.சகித் - 176, பா.தரங்கினி - 176, சி.விக்னேஷ் - 161, யெ.அஸ்விகா - 158, சு.பிருத்வீன் - 157, து.யர்மிதன் - 156, ம.மகிசனா - 152.

**யாழ்.பரமேஸ்வரா வித்தியாலயம்**
வி.ஒவிஷா - 165, பா.திலக்ஷன் - 163, ம.அக்சயன் - 161, கா.ஹரிஸ் - 152, பா.தீபிகன் - 150, த.அக் ஷயன் - 148, த.தமிழ்பிரியன் - 145, யோ.சாதுரியா - 139, வி.இலக்கியா - 138, து.விதுசியா - 124, செ.பவப்பிரியன் - 113, பா.சபரீசன் - 110, ஜெ.சர்மிலன் - 98, கு.கன்சிகா - 93, நி.ரிஸ்மியா - 88, ச.நபிஷாயினி - 84, பி.லதுநிலா - 76, சி.பிரவின் - 72. (ரி)

## மஹிந்த மீது அபாண்டம்

*அமைச்சர் அருந்திக்க கவலை*

கொழும்பு, நவ.22
30 வருடகால போரை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியில் புரட்சி செய்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைப்பது தேசியக் குற்றமாகும் என்று இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு -செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
முன்னாள் ஜனாதிபதி (கோத்தாபய ராஜபக்ச), முன்னாள் பிரதமர் (மஹிந்த ராஜபக்ச) உள்ளிட்டவர்களே பொருளாதார வீழ்ச்சிக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புக் கவலையளிக்கின்றது. இந்த நாட்டில் உரத்தை இலவசமாக வழங்கிய தலைவர்தான் மஹிந்த ராஜபக்ச. சில அதிகாரிகளின் ஆலோசனையால் உர விடயத்தில் கோத்தாபய ராஜபக்ச தவறான முடிவை எடுத்தார்.

கொரோனா நெருக்கடி ஏற்பட்டது. கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் காத்திரமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதற்கு சிறந்த தலைமைத்துவத்தை கோத்தாபய ராஜபக்ச வழங்கினார்.

மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக ஏதேனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டால் அது தேசிய குற்றமாகும். 30 வருடகால போரை அவர்தான் முடிவுக்குக் கொண்டுவந்தார். வடக்கில் வீதி, பாலம், பாடசாலை, மருத்துவமனை என அபிவிருத்தியில் புரட்சி செய்தார். இன்று வடக்கு, கிழக்கு மக்கள் தெற்கு மக்களுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

1983 இல் நாம் தவறிழைத்துவிட்டோம். நாட்டை விட்டு வெளியேறியவர்கள் தொழில்தருநர்களாகியுள்ளனர். இந்த நாட்டுக்கு வந்து முதலீடு செய்கின்றனர். போரை முடித்ததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. போரை முடிப்பதற்குச் செலவு செய்ததுபோல், யுத்தத்துக்குப் பின்னர் அபிவிருத்திக்கும் அதிக செலவு செய்யப்பட்டது - என்றார். (எ-44)



யாழ்ப்பாணம் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையின் கதிரியக்கப் பிரிவு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. விருந்தினராகக் கலந்துகொண்ட 'றைட் வ்வோர் சிலோன்' அமைப்பின் அமைப்பாளர் டேவிட் ராசையா, கதிரியக்கப் பிரிவை நாடா வெட்டித் திறந்து வைத்தார். (ச-125)

## கிளிநொச்சி ம. வி.யில் புதிய அதிபர் நியமனம்

கிளிநொச்சி, நவ.22
கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபராக திருமதி இளவேந்தி நிர்மலராஜ் கடமைகளை கடந்த திங்கட்கிழமை பொறுப்பேற்றார்.

பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை ஓய்வுபெற்றார். இந்த நிலையில் புதிதாக குறித்த பாடசாலைக்கு இளவேந்தி நிர்மலராஜ் முதல்வராக நியமிக்கப்பட்டார்.



நிகழ்வில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வடமாகாண நிர்வாக இணைப்பாளர் ருசாங்கன், அயல் பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-113)


**JOB VACANCY (MALE)**
**Production Food Quality Controller** required for our food processing plant located in Kaithady.
Must have **at least two years** of good experience
Eligible candidates can contact the below mentioned phone number
074 123 5110




'இது விதைகள் துளிர்விடும் மாதம்! நம் உதிரத்தால் உயிர்காப்போம் வாரும்' எனும் தொனிப்பொருளில் ஏழாலையூர் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. (ஒ-66)


வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்
DHL சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற் 321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.